815

தொழில்

INDUSTRY **FORTNIGHTLY**

மாதம் இருமுறை

ஆசிரியர் :
கே. பெருமாள் உடையார்

1-9-58

THE REGISTRAR OF BOOKS
1- SEP 1958



விலை 25 நயா பைசா

The following Machines & their Spare Parts available from ready Stock.

- RICE HULLER
- FLOUR MILL
- DISINTGRATOR
- DECORTICATOR
- PAPER CUTTING MACHINE

- ROTTARY & CENTRIFUGAL PUMPS
- SUGARCANE CRUSHER
- POWER DRIVEN
- PINTO TYPE &
- ROTTARY OIL MILLS ETC.

Telephone No. 3472. P. B. No. 174. Telegrams: NAVASTAR.

THE MADRAS MILL STORES

302, LINGHI CHETTY ST.,
MADRAS-1.

தொழில்

இந்த இதழில்

		பக்கம்
தலையங்கம் :		
நியாயமல்ல	...	3
இரும்பு எஃகு உற்பத்தியாளர் கோரிக்கை	...	5
தொடர்கதை :		
இணைந்த உள்ளங்கள்	...	9
சென்னை ராஜ்யத்தில் தொழில் வளர்ச்சி	...	14
சோப்புத் தயாரித்தல்	...	17
கதை :		
அவளா? இவளா?	...	19
சினிமா:		
நாடோடி மன்னன் (விமர்சனம்)	...	26
இல்லறமே நல்லறம் ,,	...	28

Sree Jayalakshmi & Co.,

MAKERS OF CANE FURNITURE

114, ராயப்பேட்டை ஐரோடு, : : மைலாப்பூர், சென்னை-4.

எந்த விதமான உபயோகத்துக்கானாலும் சரி, எப்படிப்பட்ட புது டிசைன்களாக இருந்தாலும் சரி; அவைகளை உறுதியான நல்ல பிரம்புகளைக்கொண்டு, நீடித்த உழைப்பு தரும்படி தயார் செய்து, அழகான கண்ணைக் கவரும் பலநிற இனாமல் வர்ணங்களினால் அலங்கரித்து, குறித்த நேரத்தில் தவறாது டெலிவரி செய்கிறோம்.



வெளியூர் ஆர்டர்கள் அடிக்கடி கவனிக்கப்பட்டு நேரம் தவறாமல் புக் செய்யப்படும்.

ரயில் பிரயாணத்தில் சாமான்கள் சேதம் அடையாமல் இருக்க உத்திரவாதத்துடன் பேகிங் செய்கிறோம்.

உள்ளூர் நபர்கள் ஒரு முறை எங்கள் கம்பெனிக்கு விஜயம் செய்யக் கோருகிறோம்.

மற்ற விபரங்களுக்கு இன்றே எழுதவும்.

For any purpose, any type, we have a pattern for you. All articles are guaranteedly prepared in high class canes with best workmanship which gives long lasting service. All shades of enamel paints given to the articles. Prompt delivery for local and moffussil orders. Nice paking to avoid damage during transit. Your patronage is earnestly solicited For further details please contact the above address.

உரிமையாளர்,

K. N. ராஜன்.

14854

Distribution of Iron & Steel

Approved Iron and Steel goods fabricators in the Madras State are now getting very small quantities of materials for their fabrication. The reasons for this are:—1. The number of fabricators has of late increased. Many industries have been enlisted in the category of Small Scale Industries, and these are given preference to the old industries who are not able to improve their, swing to want of materials.

Approved fabricators are not in the least jealous of the Small Scale Industries for the preferential treatment they get at the hands of the Government. But the approved fabricators who are in the line for several years should also be encouraged to improve their industries.

2. Until three years back, large quantities of unstandard materials and scrap were distributed to the fabricators to make up the deficiency in the distribution of standard materials.

The State Government should insist on the Central Government to allocate proportionately large quantities of Iron and Steel materials to this State, and arrange to distribute the materials available fairly to all the fabricators.

We have submitted to the Government on several occasions that there is no necessity to divide the old fabricators as Consumer goods fabricators and Agricultural implements fabricators. The former are also manufacturing agricultural implements such as buckets, pots, sals, watering-cans etc. which are essential for agricultural purposes. Hence the Approved Consumer Goods Fabricators (who are many in number), and the Agricultural Implements Fabricators (who are only very few in number) should be treated on the same basis and the allocations made for both the categories should be clubbed together and fairly divided amongest all the fabricators.

Whereas the Government of India has decided to issue Import Licences on a liberal scale to Actual Users, we find that in practice the Additional Director of Industries and Commerce grants essentiality certificates for a very small percentage of the applied quantities and the Deputy Iron and Steel Controller grants licences even for still lesser quantities in respect of applications for import licences submitted by the approved fabricators irrespective of the fact that such applicants are regular Sales Tax and Income-tax payers and in every other respects posses the necessary qualifications for importing Iron and Steel raw materials.

The Additional Directorate of industries and Commerce scrutinises the accounts and accords of the applicants but we are at a less to understand on what basis the applicants' requirements are assessed; whether on their consumption during the previous years of on the basis of bonafide orders held in their hands at the time of applications. In most cases we find that the Essentiality Certificates granted by this office do not satisfy any of the above two conditions.

Again when the requirements are assessed and Essentiality Certificates granted by the competent authority directly concerned with that the applicants we do not see any reason in the Deputy Iron and Steel Controller still reducing the quantities at random at the time of issuing the licences.

We request that the Government consider these points and arrange for justice to be meted out to the approved fabrictors.

K. Perumal Udayar
President,
Madras State Iron & Steel Fabricators' Association.

"அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே!"

தொழில்

ஆசிரியர் : கே. பெருமாள் உடையார்

தொழில் 1	சென்னை, 1—9—58	இதழ் 9

நியாயம் அல்ல

அண்டை நாடான இலங்கையில் குடியேறி வாழ்ந்த நம் இந்திய சகோதரர்கள் சிங்களவர்களின் வெறிச் செயல்களுக்குப் பலியாகி பரதவிக்கும் நிலை ஏற்பட்டு விட்டது. இந்தியரின் உயிருக்கும்—உடமைக்கும் பேராபத்தான சூழ்நிலை யேற்பட்டதற்கு இனவெறியே காரணமென்பது வெள்ளிடை. வேற்று நாடென்ற வெறுப்புக் காட்டாமல் தாய்நாடு போன்ற உரிமைப் பாராட்டி வாழ்ந்த இந்தியர் தலை தப்பினால் போதுமென்ற அபாயக் கட்டத்தை யடைந்து தாய் நாட்டிற்கு விரைகின்றனர். நிலை கெட்டு வரும் இந்திய மக்களை வரவேற்று ஆதரவளித்து வாழ்க்கைக்கான வசதிகளைத் தேடித்தர வேண்டியது மக்களாட்சியென்று நாம் பாராட்டும் இந்திய அரசாங்கத்தின் கடமை. தப்பியோடி வரும் இந்தியர் அனைவரும் பணவசதியுடையவர்களென்றோ, முன்கூட்டியே தாய் நாட்டில் நிலபுலன்களை சேமித்து வைத்துள்ளவர்களென்றோ கூறிவிடுவதற்கில்லை. இலங்கை வாழ் இந்தியரில் பெரும்பாலோர் கூலிகள். ஒரு சிலரே வியாபாரிகளாயும், நிலசுவான்தார்களாயும், உத்தியோகம் வகிப்பவர்களாயும் இருக்கக்கூடும். அவர்கள் நிலைதான் என்ன? சுமுகமானதாகவா இருக்கிறது? இல்லை; கால்விலை, அரைக்கால் விலைக்கு தங்கள் ஆஸ்திகளை—வர்த்தக ஸ்தாபனங்களை விற்று விட்டு ஓடி வருகின்றனர். அவ்வாறு விற்க முடியாமல் கேட்பாரற்றப் பொருள்களாய் விட்டோடி வருகிறவர்களும் இல்லாமலில்லை. பதவி வகிப்பவர்கள் பதவிகளைத் துறந்தோடி வருகின்றனர்.

அவ்வாறு தப்பியோடி வரும் இந்தியரில் பெரும்பாலோர் தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களுக்குப் போதியநிவாரண மளிக்க சென்னைராஜ்ய சர்க்கார் ஆர்வங்கொண்டது வியப்பல்ல.

இதுசம்பந்தமாய் தமிழ்நாட்டுப் பிரதிநிதி ஸ்ரீ சுப்பையா அம்பலம் டில்லி லோகசபையில் கேட்ட கேள்விக்கு வெளி விவகார உதவி மந்திரி ஸ்ரீமதி லக்ஷ்மிமேனன் அளித்த பதில் ஏமாற்றத்தையே அளித்துள்ளது.

"இலங்கையிலிருந்து அனுப்பப் படுகிறவர்கள் அநாதைகள் அல்ல என்ற முடிவுக்கு சர்க்கார் வந்துள்ளனர். பொதுவாக அவர்கள் தம் சொத்து சுகங்களுடனேயே திரும்புகின்றனர். அவர்கள் இந்தியாவுக்குத் திரும்பி வரும் பொழுது இந்தியச் சுங்க அதிகாரிகள், அவர்களிடத்தில் மிகவும் தாராளமாக நடந்து கொள்கின்றனர்.

இலங்கையிலிருந்து அனுப்பப்படுகிறவர்களின் நிலைமை பற்றிப் பரிசீலிக்க சென்னை சர்க்கார் நியமித்த விசேஷ அதிகாரியின் அறிக்கையை ஜாக்கிரதையாகப் பரிசீலித்தப் பின்பே இந்திய சர்க்கார் மேலே கண்டவாறு முடிவு செய்துள்ளனர்." —ஆகஸ்ட் 12—

மேலே கண்ட அறிக்கையிலிருந்து எல்லா அகதிகளும் சொத்துச் சுகங்களுடன்

கல்விக்கு நன்கொடை

கடந்த ஆகஸ்ட் 23-ம் நாள் ஸ்ரீ N. D. சுந்தரவடிவேலு அவர்கள் தலைமையில் திருவொற்றியூரில் நடந்த கல்வி அபிவிர்த்தி ஸ்தாபன மகாநாட்டை கல்வி மந்திரி ஸ்ரீ C. சுப்ரமண்யம் அவர்கள் துவக்கி வைத்தபோது, வில்லிவாக்கம் சிங்காரம் பிள்ளை உயர்நிலைப்பள்ளி கரஸ்பான்டெண்ட் ஸ்ரீ N. S. பினாகபாணி அவர்கள் பள்ளிக் கட்டிட நிதிக்காக ரூ. 15, 000 கொண்ட பண முடிப்பை மந்திரியிடம் அளிக்கும் காட்சியை இவ்விதழ் அட்டையில் காண்கிறோம்.

தமிழ்வர்த்தக சபையின் முன்னாள் தலைவர் காலஞ்சென்ற ஸ்ரீ எம். குப்புசாமி நாயுக்கர் அவர்கள் படத்தை ஸ்ரீ எம். ஏ. முத்தையா செட்டியார் திறந்து வைத்தார்.

திரும்புவதாக ஏற்படுகிறது. சொத்துச் சுகங்களுடன் திரும்புகிறவர்களிடத்தில் இந்தியச் சுங்க அதிகாரிகள் மிகவும் தாராளமாக நடந்து கொள்கின்றனர் என்பதிலிருந்து ஏழ்மை நிலைமையில் திரும்புகிறவர்களே யில்லையென்று நினைக்கத் தோன்றுகிறது.

அவ்வாறானால் ராஜ்ய சர்க்கார் தப்பியோடி வருகிறவர்களைப் பற்றி அக்கறையெடுத்துக் கொள்வானேன்?

சென்னை சர்க்கார் இலங்கையிலிருந்து திரும்பி வருகிறவர்களை மீண்டும் வாழ்க்கையில் குடியமர்த்தப் பின் கண்ட சிபாரிசுகளைச் செய்திருந்ததாய் அறிகிறோம்.

1. திருநெல்வேலி ஜில்லாவில் கூட்டுறவு முறையில் நிறுவப்பட விருக்கும் இரண்டு நூற்பு மில்களுக்குத் தலா 20-லட்ச ரூபாய் வீதம் மான்யம் அளித்தல் வேண்டும்.

2. வெளியேற்றப்பட்டு வந்துள்ளவர்களுக்கு ஏற்றுமதி, இறக்குமதிக் கட்டுப்பாடுகளி லிருந்து விலக்களிக்க வேண்டும்.

3. ரயில்வே-தபால்-தந்தி இலாகா உத்தியோகங்களில் நியமிப்பதில் சலுகை யளித்தல் வேண்டும்.

4. வெளியேற்றப்பட்டு வந்துள்ளவர்களின் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகைகள் தரப்பட வேண்டும்.

இம் மூவிதக் குறிப்புகளும் இன்றியமையாத தேவைகளை காட்டுகின்றன.

சொத்துச் சுகங்களோடு வந்துள்ளவர்களுக்கு நிவாரணமேன்? அவர்கள்தாம் நாடுவார்களா? ராஜ்ய சர்க்கார் தான் சிபாரிசு செய்யுமா?

சென்னை ராஜ்ய சர்க்கார் செய்துள்ள நியாயமான கோரிக்கையை மேலெழுந்தவாரியாய் மத்திய சர்க்கார் அதிகாரிகள் கவனித்திருக்கின்றனர் என்பது இதனால் புலனாகிறது.

நன்கு வாழ்ந்த விடத்திலிருந்து அவக்கேடாய் விரட்டப்பட்டுள்ளவர்களுக்கு, தாய் நாடே தஞ்சமளிக்கத் தவறினால் அவர்களின் கதி என்ன ஆவது?

சிலோன் அரசாங்கத்தின் இன்றைய கொள்கையால் நமது தாய் நாட்டு மக்கள் தங்க இடமின்றி கூட தவிக்க நேர்ந்துள்ள தென்றால் எண்ணிப் பார்க்கும் நம் இதயம் குமுறவேச் செய்கிறது. அண்மையில் அங்கு நடந்த கொலைகள். கொள்ளைகள், தாக்குதல்கள், பொருட்சேதங்கள் எத்தகைய கொடூரத்தன்மை வாய்ந்தவையென்பதை நாம்விவரிக்கவும் வேண்டுமோ!

எருதின் புண் காக்கையறியா தென்ற நிலையை நமது மத்திய அரசாங்கம் ஏற்படுத்தி விடக் கூடாதென்பதே நமது விருப்பம். அந்நிலை ஏற்படுமாறுச் செய்வது நியாயமல்ல.

சென்னை ராஜ்ய இருப்பு எஃகு உற்பத்தியாளர் சங்கம்

மத்திய சர்க்காரிடம் தூது செல்ல முடிவு

கும்பகோணத்தில் ஸ்ரீ. K. பெருமாள் உடையார் தலைமையில் நடைபெற்றது.

ஸ்பெஷல் நிர்வாகக் கமிட்டி

17—8—58 காலை 10-மணிக்கு சென்னை ராஜ்ய இரும்பு எஃகு உற்பத்தியாளர் சங்கத்தின் பிரத்தியேக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் கும்பகோணத்தில் சங்கத் தலைவர் ஸ்ரீ K. பெருமாள் உடையார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் தலைமை உரையில் எல்லோரும் சங்க அபிவிர்த்தி சம்பந்தமாய் ஒற்றுமையாய்ப் பாடுபட்டால் தான் தற்போது நம் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை சமாளிக்க முடியுமென்றும், தொழில் வளர்ச்சிக்காக நாம் அரசாங்கத்தை யணுகி நமது குறைகளை நிவர்த்தி செய்து கொள்ள தயாராக வேண்டுமென்றும் விரிவாகப் பேசினார். உதவிக் காரியதரிசி ஜனாப் A. முகம்மது இப்ராஹிம் அவர்கள் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

சங்க ஜெனரல்பாடி கூட்டம்

பிற்பகல் 3 மணிக்கு சங்க ஜெனரல்பாடி கூட்டத்தில் சங்கத் தலைவர் ஸ்ரீ K. பெருமாள் உடையார் அவர்கள் தலைமை வகித்துப் முகவுரையாய்ப் பேசும்போது நமது குறைப்பர்டுகள் நீங்க உடனடியாய் மத்திய அரசாங்கத்தை யணுக வேண்டியதின் அவசியத்தைப் பற்றி வற்புறுத்தினார்.

இரும்பு எஃகு விநியோகம் (Allotment) குறைகளைப் பற்றி பின் கண்ட அங்கத்தினர்கள் பேசினார்கள்.

A. E. ராகவசெட்டியார், R. S. குமாரசாமி, K. ராதாகிருஷ்ண முதலியார், K. ஆள்வார் அய்யங்கார், P. சுப்ரமண்யம் செட்டியார், K. தேசிங்கு முதலியார், M. A. கோவிந்தசாமி, M. பார்த்தசாரதி M. C. M. கன்னியப்பன் ஆகியோர் பேசினார்கள்.

தலைவர் முடிவுரையில் பேசியதாவது:

நமது சங்கம் சுமார் 10-ஆண்டுகளாய் நல்லவேலைகளைச்செய்துவருகிறது. நபர் ஒருவருக்கு வருடம் ஒன்றுக்கு குறைந்தது இருபது டன் கொடுக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறேன். அந்நிய நாட்டு இறக்குமதியிலிருந்து 1200 டன் சென்னை ராஜ்யத்திற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். அதை அங்கீகாரம் பெற்ற (Approved) பேப்ரி கேட்டர்களுக்குக் கொடுக்கும்படி நாம் மனுச் செய்து கொண்டால், சிபாரிசு செய்வதாய் அயரன் டைரக்டர் சொன்னார்கள். அதன் பிறகு மனுவின் பேரில் மத்திய சர்க்காருக்கும் சிபாரிசு செய்வதாய்க் கூறினார்கள். இந்த இரண்டு காரியங்களையும் மத்திய சர்க்காரிடம் தூது கோஷ்டி மூலம் விவாதிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

விவசாயக் கோட்டா

இப்பொழுது யாராவது விவசாயக் கோட்டாவில் சேர்வதென்றால் நீங்கள் அந்தந்த ஜில்லா விவசாய அதிகாரியிடம் மனுச்செய்து கொள்ளவேண்டும். அதை அவர் சிபாரிசு செய்து அனுப்புவார்.

அங்கீகாரம் பெற்றடழைய பேப்ரி கேட்டருக்கு ½ டன் கோட்டா இருந்தது. அதை 1, 2, 3 டன் என்று மூன்று ஆண்டுகளில் உயர்த்துவதற்கான வற்றைச் செய்தேன். மேலும் பேப்ரிகேட்டர்களுக்கு நன்மைச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு எல்லா கோட்டாக்களையும் ஒன்றுபடுத்தி ஸ்ரீ V. S. ராகவன் அவர்கள் மத்திய சர்க்காரின் அங்கீகாரத்திற்காக அனுப்பியிருக்கிறார்.

இதுபற்றி மத்திய சர்க்கார் அதிகாரிகளோடு விவா

திக்க அவரவர் சொந்தச் செலவில் தூதுகோஷ்டி டெல்லிக்குச் செல்லவேண்டும்.

வருஷ கோட்டா முடிவு தெரியாதவர்கள் எழுதியனுப்பும்படி டைரக்டர் சொல்லியிருக்கிறார்கள். விவரம் தெரியாதவர்கள் உடனடியாய் மனுச் செய்தால் அதிகாரியுடன் கலந்து ஆலோசிக்க ஏதுவாய் இருக்கும். சமீபத்தில் டைரக்டர் ஆபீஸ் இன்ஸ்பெக்டர்கள் விஜயம் செய்து பரிசீலித்து சிலருக்கு ரத்து செய்திருந்தால் போதிய காரணத்தோடு அவரவர்கள் நம் சங்கத்துக்குத் தெரிவித்தால் அது பற்றிய முயற்சிகள் எடுத்துப் பரிகாரம் காண முடியும்.

திருச்சியில் ஒருவருக்கு அதிகமாக்கப்பட்டிருக்கிறது. ஒரு சிலருக்கு குறைக்கப்பட்டிருப்பதுபற்றிவிவரத்துடன் எனக்குத் தெரிவித்தால் தகுந்த முறையில் அதிகாரிகளை அணுகி பரிசீலனை செய்யும்படி கேட்க முடியும்.

கடிதம் எழுதுவதில்

நாம் எல்லோரும் Addl. D. D. C. என்று எழுதக் கூடாது. இனி D. I & C. என்று எழுதவேண்டும். Iron and Steel, 35/2, Mount Road, Madras-2. என்று எழுதவேண்டும்.

ஒவ்வொருவருக்கும், எவ்வளவு அலாட்மெண்ட் பாக்கியிருக்கிறது என்பதைக் குறித்து 2-நகல்களுடன் நம் சங்கத்திற்குத் தெரிவித்தால், சர்க்கார் அதிகாரியிடம் கேட்கலாம்.

பிரீஸேல்ஸை (Free Sales) சரக்குகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ஏற்படுத்தவேண்டுமென்று யோசித்து வருகிறேன். அந்தப் பணம் அங்கத்தினர்க்கே போய்ச் சேர வேண்டும். முக்கிய அங்கத்தினர்களைப் (Share) பங்குதாரர்களாக்கவும் சேர்க்க யோசித்து வருகிறேன். பங்குத்தொகையில் அதிகமாய் இருந்தாலும் லாபம், அல்லது விநியோகம் சமமாக இருக்கவேண்டும்,

சென்ற வருடம் கல்கத்தாவுக்கு அனுப்பிய கோட்டா சர்ட்டிபிகேட்டுகளின் விபரத்தை, கிடைக்காதவர்கள் தெரிவித்தால் அவற்றை வாங்கிக் கொடுப்பதாக ஜாயின்ட் டைரக்டர் ஸ்ரீ V. S. ராகவன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

நாமெல்லாம் இங்குக்கூடி உருவான திட்டங்களை வகுக்க எல்லாவித வசதிகளையும் செய்து உதவிய உதவிக் காரியதரிசி ஜனாப் A. முகம்மது இப்ராஹிம் அவர்கட்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீர்மானம்

சென்னை ராஜ்ய சர்க்கார் அந்நிய நாட்டிலிருந்து இறக்குமதி செய்த சரக்குகளை நேரிடையாய் (இரும்பு எஃகு மூலப்பொருள்களை) வினியோகித்து வந்தபோது தொழில் சுமுகமாய் நடைபெற்று வந்தது. இப்போது மத்திய சர்க்காரின் மூலம் தற்கால விநியோகத்தைப் பெறவேண்டியிருப்பதால் பற்றாக்குறையும், தொழில் வளர்ச்சியில் தடையும் ஏற்படுகிறது. நேரிடையாய் நிலைமையை கவனிக்கும் வாய்ப்பு இல்லாமையே காரணம். ஆகவே, நமது சங்கத்தின் சார்பில் மூவர் அடங்கிய தூது கோஷ்டி சம்பந்தப்பட்ட மத்திய சர்க்கார் அதிகாரிகளை, பேட்டிக் கண்டு நிலைமையை விளக்கிக் கூறி பரிகாரம் தேடுவதென்றும் தீர்மானிக்கிறது.

நிர்வாகக் கமிட்டி

மாலை 6-30 மணிக்கு நிர்வாகக்கமிட்டி நடைபெற்றது கணக்கு, பரிசீலித்து ஒப்புக் கொள்ளப்பட்டது. புது அங்கத்தினர்களாய்ச் சேர்ந்தவர்களை அங்கீகரிக்கப்பட்டது.

பொதுக்காரியதரிசி, ஜனாப் P. H. நசுருதீன் வந்தனோபசாரம் கூற கூட்டம் முடிவுற்றது,

---

வருந்துகிறோம்

சென்னை ராஜ்ய இரும்பு எஃகு உற்பத்தியாளர் சங்க உதவிக் காரியதரிசி ஜனாப் A. முகம்மது இபுராஹிம் அவர்களின் தந்தையார் ஜனாப் அ. ஆதம்சாயபு அவர்கள் தமது 63-ம்வயதில் 20-8-58ல் 10-45 மணிக்கு கும்பகோணத்திலுள்ள தமது இல்லத்தில் இறுதியெய்தியது குறித்து வருந்துகிறோம். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, தந்தையை இழந்த முகமது இபுராஹிம் அவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தார்க்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

K. பெருமாள் உடையார்

தலைவர்,

சென்னை ராஜ்ய இரும்பு எஃகு உற்பத்தியாளர் சங்கம்.

சுதந்திரத் திருநாளில்

காலை 7 மணிக்கு

ராயப்பேட்டை நல்லண்ண முதலி தெருவிலுள்ள கஸ்தூரிபாய் சேவா சங்கத்தில் ஸ்ரீM. கன்னியப்பன் அவர்கள் தலைமையில் சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. ஸ்ரீ K. பெருமாள் உடையார் அவர்கள் தேசியக் கொடி யேற்றி வைத்தார். சிறுவர்க்கு மிட்டாய் வழங்கப்பட்டது.

காலை 7-30 மணிக்கு

கிருஷ்ணம்பேட்டை பி.பி. ரோடிலுள்ள காங்கிரஸ் ஊழியர் சங்கத்தில் ஜனுப் ஹாஜாஷரீப் M.L.A. அவர்கள் தலைமையில் ஆல்டர்மேன் ஸ்ரீ K. பெருமாள் உடையார் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். ஸ்ரீமதி பத்மினி ராகவன் B. A. B. L. அவர்கள் சிறுவர்க்கு இனிப்பு வழங்கினார்கள்.

காலை 8 மணிக்கு

எடப்பாளையம் தெரு நகராண்மைப் பள்ளிக்கூடத்தில் ஸ்ரீ M. பார்த்தசாரதி M. C. அவர்கள் தலைமையில் ஸ்ரீ K. பெருமாள் உடையார் அவர்கள் தேசியக் கொடி ஏற்றிவைத்தார்.

காலை 8-30 மணிக்கு

பூங்கா நகர் தமிழரசு கழகத்தில் ஸ்ரீ P. செல்வநாதம் செட்டியார் அவர்கள் தலைமையில் ஸ்ரீ K. பெருமாள் உடையார் அவர்கள் தேசியக் கொடி ஏற்றிவைத்தார்.

*திருவல்லிக்கேணி வாழைப் பழ வியாபாரிகள் சங்க சார்பில் நடந்த சுதந்திர தின விழா ஸ்ரீ. M. R. ராஜகோபால் நாயுடு அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. ஸ்ரீ K. S. ஏகாம்பரம் அவர்கள் தேசியக் கொடி ஏற்றுவித்தார். சிறுவர்க்குப் பழங்களும், மிட்டாயும் வழங்கப்பட்டது என்று காரியதரிசி எம். ஸ்ரீனிவாச அம்பலக்காரர் அறிவிக்கிறார்.

காலை 9 மணிக்கு

வியாசர்பாடி முத்திருளாண்டி கழகத்தில் ஸ்ரீ M. ஜகதீசன் P. C. C. அவர்கள் தலைமையில் ஸ்ரீ K. பெருமாள் உடையார் அவர்கள் தேசியக்கொடி ஏற்றிவைத்தார்.

காலை 10-30 மணிக்கு

தேசிய முஸ்லீம் பெடரேஷன் சார்பில் ஸ்ரீ ராஜகோபால் நாயுடு அவர்கள் தலைமையில் ஸ்ரீ K. பெருமாள் உடையார் அவர்கள் கொடியேற்றிவைத்தார். தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீ K. ராஜாராம் நாயுடு அவர்கள் பெடரேஷனைத் துவக்கிவைத்தார்.

மாலை 3 மணிக்கு

சைதாபேட்டை C. I. T. காலனியிலுள்ள பொது நல ஊழியர் சங்கத்தில் நடந்த விடுதலை விழாவுக்கு ஸ்ரீ K. பெருமாள் உடையார் அவர்கள் தலைமை வகித்தார். விழா சிறப்பாக நடைபெற்றது.

மாலை 4-30 மணிக்கு

மைலாப்பூர் பொது நல சேவா சங்கத்தின் சார்பில் கொண்டாடப்பட்ட ஆண்டு விழாவுக்கும் விடுதலை விழாவுக்கும் ஸ்ரீ K. பெருமாள் உடையார் அவர்கள் தலைமை வகித்தார். ஸ்ரீ C. R. ராமசாமி M. L. A. அவர்கள் விழாவைத் துவக்கிவைத்தார். மராமத்து இலாகா மந்திரி ஸ்ரீ P. கக்கன் அவர்கள் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

———

காங்கிரஸ் வளர்ச்சியே தேசத்தின் வளர்ச்சி

—※—

தலைவர்கள் வேண்டுகோள்

———

சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் ஆதரவில் சுதந்திரதினத்தை யொட்டி திருவல்லிக்கேணி கடற்கரையில் மாபெரும் பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது. ஸ்ரீ டி. செங்கல்வராயன் தலைமை வகித்தார். முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் பிரசன்னமாயிருந்தார்.

சுதந்திர தினத்தன்று காந்திஜி மற்றும். சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தியாகிகளுக்கு அஞ்சலி செலு

த்த வேண்டுமென்றும், பல ஆண்டுகள் பாடுபட்டதன் பயனாக இந்நாடு முன்னேறி யிருக்கிறதென்றும், இந்தியா சாதித்துள்ள விஷயங்களை மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்றும் ஸ்ரீ செங்கல்வராயன் கேட்டுக்கொண்டார்.

மந்திரி ஸ்ரீ கக்கன் பிறகு பேசுகையில், நம்முடைய அன்பை இன்றுதினம் நம் தலைவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதுடன், தியாகிகளுக்கு நன்றி செலுத்த வேண்டுமென்றும், சமீபத்தில் நடைபெற்ற தூத்துக்குடி தேர்தலில் காங்கிரஸுக்கு வெற்றி கிடைத்ததே அதற்கு ஆதரவு அதிகமிருக்கிறதென்பதற்குத் தக்க ருசுவென்றும்கூறினார்.

த. நா. கா. கமிட்டித் தலைவர் ஸ்ரீ கே. ராஜாராம் நாயுடு அவர்கள் நம்முடைய சொந்த உழைப்பாலே தான் நாம் முன்னேறவேண்டுமென்றும், திட்டம் போட்டுக் கொடுக்கும் கட்சி இந்நாட்டில் வேறு ஏதாவது இருக்கிறதா என்று தாம் கேட்பதாயும், சுதந்திரம் கிடைப்பதற்கு நாம் இதற்கு முன் பாடுபட்டதை விட இப்பொழுதுதான் அதிகம் பாடுபட வேண்டுமென்றும், காங்கிரஸ்காரர் மக்களுடன் தொடர்பு கொண்டு அவர்களுடைய குறைகளை அறிந்து அவற்றைத் தீர்க்க முற்பட வேண்டுமென்றும், நாட்டில் குழப்பத்தை உண்டுபண்ணும் தீய சக்திகளுக்கு இடம் கொடுக்கக்கூடாதென்றும் கூறினார்.

ஸ்ரீமதி டி. என். அனந்தநாயகி, ஸ்ரீமதி சரஸ்வதி பாண்டுரங்கம், ஸ்ரீ தோழர் ராமசாமி முதலியோர் பேசினர்.

சென்னை மாவட்ட மருத்துவர் சங்கம்

1958 - 1959 புது நிர்வாகஸ்தர்கள்

தொடர் கதை:

—புலவர் நா. தேவநாதன்—

முன் கதைச் சுருக்கம்

எஸ். எஸ். எல். ஸி. வரை படித்த செல்வ நம்பி மேலும் படிக்கத் துடிக்கிறான். ஏழைக்குடும்பத்தில் பிறந்தக் காரணத்தால் மேலும் படிக்க முடியாமல் வீட்டைவிட்டு வெளியேறி விடுகிறான். வெளியூரில் ஓர் பணக்காரர் உதவியை நாடுகிறான். அவர் விரட்டவே, வழியிலிருந்த கார் ஒன்றிலிருந்த பணத்தையும், துணியையும் திருடுகிறான். திருடின சொகுசான உடையோடு வேறொரு ஆளோடு ஒட்டல் அறையில் தங்குகிறான், அவனோடு சேர்ந்து திட்டமிட்டு சினிமாவுக்குச் செல்லும் வழியில் குழந்தையின் கழுத்துச் சங்கிலியை அறுக்கிறான், மறுநாள் வைத்தியக் கல்லூரியில் சேரப்போகிறான். தான்காரிலிருந்துதிருடிய பணமும் உடையும் தலைவருடையவை யென்றறிகிறான். தன் பொருளைத் திருடியவன் என்றறிந்தும் கல்லூரித் தலைவர் அவனை ஆதரிக்கிறார்.

பொன்னியம்மாள் மகனைத் தேடிச் செல்கிறாள். மருதமுத்துவின் வீட்டுக்குப் போய் அங்கிருந்து விரட்டப்படுகிறாள். வேறொரு ஊருக்குப் போய் மகனைத் தேடுகிறாள். அங்கே ஒரு வாலிபன் அவளை அன்போடு வரவேற்று வீட்டுக்கு அழைத்துப் போகிறான். உழவர் வீட்டுக்குத் திரும்பி வந்த செல்வநம்பியை கிழவனும், கிழவியும் கோபித்துக் கொள்கின்றனர். அவர்களுக்குச் சமாதானம் சொல்லிவிட்டு எஸ். எஸ். எல். ஸி. சர்டிபிகேட்டை எடுத்துக்கொண்டு பழங் கஞ்சி கொஞ்சம் குடித்து விட்டு வெளியூருக்குப் புறப்படுகிறான் செல்வநம்பி.

மேலும் நடக்கும் சம்பவங்களையறிய கதையில் புகுங்கள்.

செல்வநம்பி, 'நான் உங்கள் மகன் போன்றவன் என்பதை மறந்து விட வில்லை. மகனை மட்டும் வீட்டில் இருந்தால் மகிழ்ச்சி வளர்ந்து விடுமா? வளராது. அதற்காகத் தான் நான் பாடுபட்டு வருகிறேன், தடை சொல்லாமல் சந்தோஷத்துடன் உத்தரவு கொடுங்கள்' என்றான். இருவரும் 'சரி' என்று சொல்லி மெல்ல அவன் நழுவிய நிலையில் விட்டு அனுப்பினர்.

சென்ற செல்வநம்பி, செல்லும் வழியிலெல்லாம் பார்வையைச் சுழற்றிச் சென்றான். சேதுபதியின் வீட்டில் சிந்தை கலங்கிய நிலையில் தங்கியுள்ள' தாய் இவன் கண்களுக்கு எப்படித் தெரிவாள்?

காணாத நிலையிலே கவலை நெஞ்சமுடன் கல்லூரி அடைகிறான். கல்லூரியைச் சேர்ந்து விட்டான்.

தன் மனத்தை ஒருமையாக்க முயல்கிறான். ஆனால் தாய் மீதும், எதிர் காலத்தில் படிப்புக்கு வேண்டிய பணத்தின் மீதும் அவன் மனம் பிரிந்து செல்லுகிறது. மனத்தைச் சிறிது அடக்கப் பயிலுகிறான்.

6. செல்வநம்பி செல்வத்திற் கலைதல்

மாதம் ஒன்று கழிந்தது; கையிலுள்ள செல்வமும் செலவழிந்தது. இரண்டாம்

மாதம் பிறந்தது; 'பிரின்சிபால்' தன் சக்தி உள்ளவரை உதவி செய்தார். அவர் போக்கு மிகவும் நேர்மையானது என்பதை யார் தான் ஒப்புக்கொள்ளாமலிருக்க முடியும்? இவரை மனிதத் தெய்வம் என்றே சொல்லலாம்.

மூன்றும் மாதம் பிறந்து விட்டது. செல்வ நம்பியின் முகத்தில் ஒளி குறைகிறது. சிந்தனைப் பார்வை வளர்கிறது 'நம் கல்லூரித் தலைவர் முதலில் சொல்லியபடி ஆதரித்தார். மேலும் ஆதரிக்க வேண்டும்' என்று கேட்பது கூடாது. என்ன செய்வது என்று பலவாறு எண்ணிக்கொண்டிருந்த பொழுது, சிறிது தூரத்தில் இருவர் பேசிக் கொண்டிருப்பது அவன் காதிற் கெட்டியது.

அங்கே 'அடடா' தங்கமான மனுஷன் சின்னசாமி. அவனைப் பிடிச்ச மலேரியா அவனை அப்படியா கொண்டு போயிடணும்? என்றான் மற்றொருவன், 'நேற்றிரவு கூட நான் வரும்போது கேட்டுல இருந்து கனைத்துக் கொடுத்தானே. என்னடா வேதனையான மனிதப் பிறவி. அவனுடைய பெண்டாட்டி பிள்ளைகள் நிலை என்னடா ஆவறது? அவனைக் கடைசியாகப் பார்த்து விட்டாவது வரலாம் வாடா' என்று கூறினான்.

அந்தக் கல்லூரியின் 'வாட்ச் மேன்' தான் 'மலேரியா' காய்ச்சலால் இறந்துவிட்ட சின்னசாமி. இரண்டு மாணவர்கள் இதைப் பற்றிப் பேசிக் கொண்டு செல்லுகின்றனர்.

செல்வநம்பி நேராகக் கல்லூரித் தலைவரிடம் சென்றான். தலைவர், 'வாட்ச் மேன்' மரணத்தைக் கேட்டுச் சிறிது அமைதியாகச் சிந்தனை செய்த நிலையில் இருந்தார். மெல்லத் தலை நிமிர்ந்து எதிரிலுள்ள, துன்பமும் மகிழ்ச்சியும் ஒருங்கு அமைந்தாற் போலக் காணப்படும் செல்வநம்பியின் முகத்தைக் கண்டார்.

கல்லூரித் தலைவர், தன் உள்ளத்தில் தோன்றிய எண்ணத்தைச் சொல்லச் சிறிது தயங்கினார். செல்வநம்பி, சின்னசாமி பார்த்துவந்த 'வாட்ச்மேன்'வேலையை எனக்குக் கொடுத்தால் எனக்கு எவ்வளவோ வசதிகள் அமைகின்றன' என்றான். தாராளமாகத் தருகிறேன். உன் உழைப்பைக் கண்டு எனக்குத் தனி ஆர்வம். உன் ஆர்வமே உன் வாழ்வை உயர்த்தும். உனக்கு இந்த வேலையைக் கொடுப்பதற்கு வெட்கப்படுகிறேன். இது வெளியாளுக்குத் தெரியக் கூடாது. நீ காவல்காக்கும் போது உன் உடை முதலானவற்றையும் பெயரையும் மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் இது சட்டசபையில் கேள்விக்கு வரும். எனக்கும் இழிவு. உனக்கும் இழிவு. நம் நாட்டிற்கும் இழிவு. ஆனால் நல்லவர்கள் உன் முயற்சியை இழிவாகக் கருத மாட்டார்கள். இப்பொழுது உனக்குக் கிடைக்கும் அரசாங்கச் சலுகை உனக்குப் போதாதுதான், இதையெல்லாம் நீ நினைக்காதே. எத்தனையோ மாணவர்கள் முனிசிபல் விளக்கில் படித்தும், பல இடங்களில் பணம் வசூல் செய்தும் நாள் தோறும் ஒவ்வொரு ஆசிரியர் வீட்டில் உண்டும், இப்பொழுது நீ செய்ய விரும்புவது போல் 'வாட்ச்மேன்' வேலை பார்த்தும் பிற்காலத்தில் பெரிய நீதிபதிகளாக வந்துள்ளார்கள்; சமுதாயத்திற்கு உழைக்கும் சிறந்த தொண்டர்களாக வந்திருக்கின்றார்கள். நீயும் கூட அப்படிப் பட்டவர்களுள் பெருந்தன்மையாளனாக சேர்க்கப்படலாம்' என்று அந்த வாச்மேன் பொறுப்பைச் செல்வ நம்பியிடம் ஒப்புவித்தார்.

'ஒரே கல்லில் இரண்டு மாங்காய்விழும்' என்பது போல இந்தக் காவல்காரன் உத்தியோகத்தினால் செல்வநம்பிக்கு இரண்டு வகையான நன்மைகள். ஒன்று படிப்பிற்குச் சற்றேறக் குறையப் பணம் கிடைக்கிறது. இரண்டாவது, பகல் நேரத்தில் காலையில் சிறிது தூங்கி இரவில் அமைதியுடன் நன்றாகப் படிக்க முடிகிறது. சில நாட்கள் தான் இவ்வாறு நடந்தன.

சின்ன சாமியின் தம்பி ஒரு சீட்டை எடுத்துக் கொண்டு வருகிறான்.

அந்தச் சீட்டினை, முதலில் செல்வநம்பியிடம் காட்டவேண்டிய அவசியமில்லை. இருந்தும் அவன் சோர்ந்த நிலையில் செல்வநம்பியிடம் காட்டிவிடுகிறான். அதைப் பார்த்துப் படித்த செல்வ நம்பி முகம், செத்தவன் முகம் போல் வெளுத்து விட்டது.

வறியவனை வறியவன் வந்து உதவி வேண்டுகிறான். வேடிக்கையான உலகம். செல்வ நம்பி, அந்தக் கடிதத்தைக் கையில் வைத்துக் கொண்டு சிறிது சிந்திக்கிறான். கல்லூரித் தலைவரிடம் சொல்லி வேறு எங்காவது ஒரு தொழில் வாங்கித் தரலாம். சின்னசாமியின் தம்பிக்கு அதைச் செய்வதாகக்கூட அவன் சிந்தனை செய்யவில்லை. 'மற்றொரு குடும்பத்தின் சுகத்திற்கு நாம் ஏன் தடையாக இருக்க வேண்டும்' என்று

அளவில் தன் சிந்தனையை முடித்து கல்லூரித் தலைவரிடம் சின்னசாமியின் தம்பியை அழைத்துக் கொண்டு செல்லுகிறான்.

சின்னசாமியின் கையிலேயே அந்த சீட்டைக் கொடுத்து அனுப்பி விட்டான். தான் சிறிது பின் தங்கிச் சென்று வாசற்படிக்கு வெளியில் நின்று கொண்டான். சின்னசாமியின் தம்பி, கல்லூரித் தலைவருக்கு வணக்கம் தெரிவித்தான். பிறகு, கடிதத்திலுள்ளதைக் கல்லூரித் தலைவர் கவனித்தார். அக் கடிதத்தின் செய்தி.

யான் இறப்பது நிச்சயம்! என் குடும்பத்தை அலைய வைத்து இறப்பது தான் எனக்கும் கவலையாக இருக்கிறது. எனக்குக் கொடுத்திருந்த 'வாச்மேன்' தொழிலை என் தம்பிக்குக் கொடுத்தால் என் மனைவி மக்களைக் காப்பாற்றியவர் ஆவீர். இதுவே யான் தங்களிடம் கடைசியாக வேண்டுவது.

இப்படிக்கு

தங்கள் பணிவுள்ள

சின்னசாமி.

என்று எழுதப் பட்டிருந்தது. படித்து விட்டுத் தலைநிமிர்ந்து செல்வ நம்பியைப் பார்த்தார். செல்வநம்பி, 'என் தொழிலை இவருக்கே கொடுத்து விடுங்கள். நான், எப்படியாவது பண வசதி தேடிக் கொள்ளுகிறேன்' என்று கூறிவிட்டான். அவ்வளவு தான்! சின்னசாமியின் தம்பி 'வாச்மேன்' ஆகி விட்டான்.

சில நாட்களுக்குப் பிறகு, கல்லூரித் தலைவரின் லெட்டர் பேப்பர் சிறிது மிகுதியான அளவில் கிழிக்கப்பட்டு வந்தன. அந்த லெட்டர் பேப்பர் புத்தகம் கூடச் செலவாகி, அடுத்த புத்தகமும் ஒவ்வொரு ஏடாகக் கிழிந்து செல்வ நம்பியின் கையில் கொடுக்கப்பட்டு வருகிறது.

கிழிந்த ஒவ்வொரு லெட்டர் பேப்பரிலும், உலோபிகள் எல்லாம் 'வள்ளல்கள்' என்ற பெயருடன் சிறப்பித்துக் கூறப்பட்டிருந்தனர். செல்வ நம்பியின் கல்வி சம்பந்தமான முயற்சிகள், விளம்பரம் செய்வது போல் எழுதப் பட்டிருந்தன. காணாதவர்களுக்கு எல்லாம் கூடக் கல்லூரித் தலைவர் பேனா முனையில் கும்பிடு போட்டு வைத்திருந்தார். இக்கடிதங்களை வாங்கிக் கவரில் அனுப்பிய செல்வநம்பிக்குக்கூட எவ்வளவோ பணம் செலவானது.

இவ்வளவு கடிதங்கள் சென்றதற்காக ஒருவர் மட்டும் ஒரு மணியார்டர் அனுப்பி வைத்திருந்தார். அந்தப் பணமும் கூடக் கடிதச் செலவைச் சரிப்படுத்தாத அளவு பணம், கவரின் மீது அனுப்பிய அட்ரஸ் எழுதாமல் கூடச் சில கடிதங்களை அனுப்பினான் செல்வநம்பி. பயனில்லை.

'சிலந்தியும் கூட அறுந்து அறுந்து விழும் கூட்டைக்கட்டி முடிக்கிறது. நாமும் முயற்சியைத் தளர விடக்கூடாது' என்று எண்ணிக் கொண்டு, கல்லூரித் தலைவரிடம் நற் சான்றுகளும் உதவி வேண்டு கோளும் அமைந்த கடிதங்களைப் பெற்றுக் கொண்டு சில செல்வந்தர்களை நேரடியாகக் கண்டு பொருளுதவிப் பெற வேண்டும் என்று புறப்பட்டு விட்டான்.

செல்வநம்பி, பரம்பரை ஆண்டி அல்ல; பஞ்சத்து ஆண்டி. ஆண்டித் தனத்தில் திறமை பெற்றவர்கள் எத்தகைய செல்வரிடத்தில் எந்த நேரத்தில் எப்படிப் பேசினால் எந்த அளவுச் சலுகைப் பெறமுடியும் என்பதைஎல்லாம் அறிந்துவைத்துக் கொண்டிருப்பார்கள். அந்தக் கலையைக் கொண்டு காலம் கழிப்பார்கள். செல்வநம்பி பழக்கம் இல்லாதவன். பழக்கம் இருந்தால்தானே வழக்கத்திற்குக் கொண்டு வந்து இதில் தேர்ச்சிப் பெற்றுக் காசு வாங்கி காலம் கழிக்கலாம். செல்வந்தர்கட்குப் பணிவுடைமை வேண்டுவது அவசியம். இது வள்ளுவர் சட்டம். உண்மையான பணிவு இல்லாவிட்டாலும் நடிப்பது போலாவது இருக்க வேண்டும். இது செல்வர் செல்வம் சம்பாதிக்க வழி. இவர்கள் நிலைக்கே இந்த விதி என்றால் அனாதைகளுக்கு எவ்வளவு பணிவு வேண்டும் என்பது சொல்ல வேண்டியதில்லை. பணம் கிடைத்த பிறகு அன்பிற்குப் பணிவு வேண்டியது அவசியம். ஆனால் கொடுப்பதற்கு முன் அடிமைத் தனக்காரன் போல உள்ளம் சுருக்கி, முகத்தைச் சாய்த்துக் கைகளை தோள்களில் கோத்து கால்களை நெருக்கி வைத்து அசையாமல் பதுமை போல் நின்றிருக்க வேண்டுமே! இயற்கையிலேயே பதற்றம் உடைய இச்செல்வ நம்பியால் எப்படி முடியும்? பார்க்கலாம்.

தான் ஏறி வரும் வண்டி குறிப்பிட்ட ஸ்டேஷனில் தங்கியது. விளக்கு வைக்கும் நேரம். இந்த நேரத்தில் அந்த ஊரில் உள்ள

செல்வந்தரைப் பார்ப்பதற்கு முன் அந்தச் செல்வந்தரின் குண விசேடங்களைத் தெரிந்து கொள்ளுவதற்காக அந்த ஊர் உயர் நிலைப் பள்ளி ஹெட் மாஸ்டர் வீட்டிற்குச் செல்லலாம் என்று, ஹெட்மாஸ்டர் வீட்டிற்குச் சென்றான்.

அவரிடம் தான் வந்தக் காரியத்தைச் சொல்லி அந்த ஊர் செல்வந்தர்களின் பண்புகளை எல்லாம் விசாரித்தான். சிலரைப் பற்றிச் சொல்லிக் கொண்டு வந்தார். ஆனால், எதிர் வீட்டில் உள்ளவரைப் பற்றிச் சொல்ல மறந்து விட்டார். முக்கியமான இடத்தில் தான் மூளை சரியாக வேலை செய்வதில்லை சிலருக்கு. இதெல்லாம் பேசி முடிக்கும் நேரத்தில் இரவு 8 மணி ஆகி இருக்கும். 'இந்த ஊரில் உனக்கு உதவி செய்தால் இரண்டு பேர் தான் செய்தல் கூடும். அவர்கள் காலையில் ஒரு திருமணத்திற்காக வெளியூருக்குப் புறப்பட்டாலும் புறப்படலாம். ஆகையால், இப்பொழுதே சென்று சந்தித்து விட்டுவா. வருவதற்குள் நம் வீட்டில் சமையலெல்லாம் முடிந்துவிடும். இரவு இங்கே தங்கியிருந்து காலையில் நீ செல்லலாம் என்று கூறியனுப்பினார்.

செல்வ நம்பி தெருவிற்கு வந்தான். சிறிது தயங்கி நின்றான். அப்பொழுது அவனை எதிர் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்த மணியக்காரர் பார்த்தார்; அழைத்தார். செல்வநம்பியும் அவரிடம் சென்றான்.

கிராம அதிகாரி, அவனைப் பார்த்து 'நீ யார்? ஹெட்மாஸ்டருக்குச் சொந்தக்கார ஆளா?' என்று கேட்டார். 'நான் ஹெட் மாஸ்டருக்குச் சொந்தக்காரன் இல்லை. கல்லூரியில் படிப்பவன். கல்வியின் பொருட்டு காசுகேட்க இந்த ஊருக்கு வந்தேன்' என்று கூறினான் செல்வ நம்பி.

கிராம அதிகாரி, 'அடடா......அப்படியா......நீ எந்த ஜாதி?' என்றார். செல்வநம்பி, 'நான் உழவன்' என்று சொல்லி முடிப்பதற்குள் 'அப்ப நம்ம ஜாதிப் பிள்ளை தான்......நீ இங்கேயே இரவு தங்கியிருக்கலாம். எதிர் வீட்டு ஹெட்மாஸ்டர் என்ன சொன்னார்?' என்று கேட்டார். 'அவர், 'இப்பொழுதே சென்று சில செல்வந்தர்களைப் பார்த்து விட்டு வா என்றார்' என்றான் செல்வநம்பி. கிராம அதிகாரி மறுத்து விட்டார். 'இந்த இரவு நேரத்துலயா.....? கொடுக்கறவன் கூட கொடுக்க மறுக்கற நேரம். எல்லாம் காலையில் போகலாம். இங்கேயே சாப்பிட்டுவிட்டு இரு! 'நானு கூடக் காலையில் உன்னோடு வந்து ஏதாவது உதவி செய்யச் சொல்லுகிறேன்' என்றார். இதைக் கேட்ட செல்வநம்பி, 'ஹெட்மாஸ்டர் அவர் வீட்டிலேயே சாப்பிடச் சொன்னாருங்க' என்றான். கிராம அதிகாரி, 'கொஞ்சங் கிட்ட வா தம்பி! படிக்கறதயா சொல்லற. உலகம் தெரிஞ்சுக்கலய நீ......முதலில் வந்ததும் அவர் வீட்டிற்கு வந்ததே சரியில்ல; அதோட அவர் வீட்டுல் சாப்படறன் இன்னு சொல்லறய. நாளக்கி யாராவதுஇந்த ஊருல இதைப்பற்றிச் சீரா புரிஞ்சுகிட்டா, எனக்கு எவ்வளவு அவமானம்? உனக்குங் கூடத் தான் இதனால் என்ன நன்மை இருக்கு. இங்கேயே தங்கியிரு' என்றார். இதைக் கேட்டு சிறிது தயக்கம் கொண்ட செல்வ நம்பி, 'என்னங்கோ செய்தி? எனக்கொன்றும் புரியல' என்றான். 'எதிர் வீட்டு வாத்தியாரு பறையன் தம்பி, பறச்சாதி. இந்தக் கவர்ன்மெண்டு இத எல்லாம் எங்க கவனிக்குது? என்னமோ இந்த ஊருக்கு மாத்தித் தொலைச்சுட்டாங்க. அந்த வீட்டுல போய் தங்கி தண்ணி குடிக்கறதாவதுஎன்று சொல்லி நிறுத்தினார். செல்வநம்பிக்கு கிராம அதிகாரிமீது சிறிது கோபம் வந்தது. காலப் போக்கை உணராதவர்கள் பழமைக்குப் பாதை அமைக்கப் பார்க்கிறார்கள். இப்போது எதிர்த்த முறையில் வாய்கொடுத்தால் இந்தப் பேச்சின் முடிவு 'தலைமை ஆசிரியரை பாதிக்கும்' என்று எண்ணி, 'என்னுடைய பை எல்லாம் எதிர் வீட்டிலேயே இருக்குங்க. எடுத்துக்கிட்டு வந்துடறேனுங்க' என்று சொல்லி விட்டு புறப்பட்டு ஹெட் மாஸ்டர் வீட்டிற்குள் நுழைந்தான். ஹெட் மாஸ்டர் அறைக்குச் சென்றான்.

(தொடரும்)

∴ ∴ ∴

இந்திய கலாச்சாரம் என்பது முழுக்க முழுக்க இந்துக்களுடையதுமில்லை, இஸ்லாமியருடையதுமில்லை. அனைவற்றின் சேர்க்கையே அது. எல்லா நாட்டுக் கலைகளின் காற்றும் தாராளமாக என் வீட்டில் வீசுவதாக. ஆயினும் ஒன்றும் என்னை அடித்துக் கொண்டு போக நான் விடமாட்டேன்.

—மகாத்மா காந்தி.

M. KANNAN

Government Approved Fabricator and Contractor
(Regd. 10)

No. 30, Wall Tax Road, Madras-3.



★

Please Contact us for
Collapsible Gates,
Main Gates,
Window Grills,
Ventilators and all other
Building materials.

★

Steel Trusses and erection works undertaken.



COLLAPSIBLE GATE

Specialist in Arc and
Gas welding.
Stainless Steel, Alumi-
nium Gas cutting works
are also undertaken.



MAIN GATE

Our motto is to satisfy our customers.

சென்னை ராஜ்யத்தில் தொழில் வளர்ச்சி

(இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தின் அடிப்படையில் நமது ராஜ்யத்தில் செய்யப்பட்டுள்ள சாதனைகளைக் குறிக்கிறது இக்கட்டுரை—ஆ-ர்.)

——✻— —

நம் நாட்டில் தொழில் வளர்ச்சித் துறையில் சென்னை ராஜ்யம் மூன்றும் ஸ்தானத்தை யடைந்திருக்கிறது. பம்பாயும், மேற்கு வங்கமும் முதல் இரண்டு ஸ்தானங்களை யடைந்துள்ளன, பூகோள ரீதியில் இது மகத்தான சாதனையாகும். இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தின் அடிப்படையில் கனரகத் தொழில்களுக்கும், சிறு அளவு தொழில்களுக்குமாய் தனிச் சலுகைக் காட்டப்பட்டுள்ளது.

இயற்கையாக நம் ராஜ்யத்தில் பெருத்த அளவில் இரும்பு, நிலக்கரி தோண்டி எடுக்கும் சுரங்கத் தொழில்களை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்பில்லை. சமீப காலத்தில் தென்னாற்காடு ஜில்லாவில் கண்டு பிடிக்கப்பட்ட பழுப்பு நிலக்கரி, தொழில் வளர்ச்சிக்கும், மின்சார உற்பத்திக்கும் வசதியாய் அமைந்துள்ளது மகிழ்ச்சிக்குரியதாகும். இதன் உதவியால் சேலம் ஜில்லாவில் மட்டரக இரும்பு உறுக்குத் தொழிலை நடத்தவும், மேட்டூரில் அலுமினிய மூலப் பொருள் உற்பத்திப் பண்ணவும் போதுமான மின்சார சக்தியை உண்டு பண்ணிக் கொள்ள முடியும். நெய்வேலி பழுப்பு நிலக்கரி ஸ்தாபனத்தை யடுத்து. வேறு பல உப தொழில்களையும் உண்டு பண்ணிக் கொள்ளலாம்.

இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் ரூ. 70 கோடி செலவில் நிலக்கரி தோண்டியெடுக்கும் திட்டம் தீட்டப்பட்டு அதற்காக லிமிடெட் கம்பெனி நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் இரு நூறு மில்லியன் வால்ட் அனல் மின்சாரம் உற்பத்திப் பண்ணப்படுவதோடு, எழுபதாயிரம் டன் நைட்ரஜன் ஊரியாவும் தயாரிக்க முடியும். பிரதமர் நேரு 1957-ம் ஆண்டு மே மாதத்தில் நிலக்கரி எடுக்கும் வேலையைத் துவக்கி வைத்தார். இப்போது வேலை நடைபெற்று வருகிறது. பழுப்பு நிலக்கரி எடுப்பதற்கான பிரத்தியேகமான கருவிகள் 1958-ம் ஆண்டு முடிவுக்குள் கிடைத்து விடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1950-ம் ஆண்டு மத்தியில் பழுப்பு நிலக்கரி தோண்டியெடுக்கப்படும். நீர் மின்சார திட்டமும் அனுமதிக்கப்பட்டுள்ளது, இதற்கு ரஷ்யாவின் பண உதவி கிட்டும்.

சேலத்தில் இரும்புத் தொழில் ஆரம்பிப்பதற்கான மேலும் நான்கு விண்ணப்பங்கள் இந்திய அரசாங்கத்தினர் கவனத்திலுள்ளன. சேலத்தில் கிடைக்கும் கனிப் பொருள் மேட்டூரில் ஆரம்பிக்க விருக்கும் அலுமினியம் தொழிலுக்குப் பயன்படுமா வென்பதையறிய வெளிநாட்டுக் கம்பெனி யொன்று ஆராய்ந்து வருகிறது. உதகமண்டலத்தில் கச்சா போட்டோ பொருள்கள் தயாரிக்கும் ஸ்தாபனம் நிறுவப்படலாம் என்றெதிர் பார்க்கப்படுகிறது. இத்தாலியிலிருந்து பொருளுதவி பெற்று செயற்கைப் பட்டு நூல் தயாரிக்கும் ஸ்தாபனம் ஒன்று நிறுவும் திட்டமுமிருக்கிறது. மூங்கில் நாரிலிருந்து பட்டு நூல் தயாரிப்பது பற்றியும், தீவிர முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலியில் காஸ்டிக் ஸோடா தொழிலை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது அம்பத்தூரில் ரப்பர் டயர் தொழிலை ஆரம்பிக்கும் முயற்சி முன்னேற்ற மடைந்துள்ளது. ராமநாதபுரம் ஜில்லாவில் ஓர் புது சிமின்ட் தொழிற்சாலை ஆரம்பிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. டி. ஐ. தொழிற்சாலையில் வருடம் ஒன்றுக்கு மூன்று லட்சம் சைக்கிள்கள் வரை தயாரிப்பதற்கு ஏதுவாக மீட்டர்கேஜ் ரயில் பெட்டிகள் உற்பத்திப் பண்ணும் தொழிற்சாலையொன்று சென்னைக்குச் சமீபமாய் சென்ற வருடம் ஆரம்பிக்கப்பட்டது.

மேலும், மின்சார மோட்டார், மின்சாரத்தில் இயங்கும் தண்ணீர் குழாய்கள், மின்சார விநியோகம் செய்யும் இயந்திரங்கள், பித்தான் கியர் முதலியவை தயாரித்தல் இவற்றிற்காகபல ஸ்தாபனங்களுக்கு அனுமதி

யளிக்கப்பட்டுள்ளன. செங்கற்பட்டு, வட ஆற்காடு கோயமுத்தூர் ஜில்லாக்களில் மூன்று புது சர்க்கரை ஆலைகள் 1959-ம் ஆண்டு மத்தியில் வேலை துவங்கப்படலாம் என்று எதிர் பார்க்கப் படுகிறது. வெற்றிகரமான தொழில் வளர்ச்சியை முன்னிட்டு அரசாங்கம் கணிசமான அளவுக்கு பங்குகள் வாங்கியுள்ளன.

சிறு ரகத் தொழில்கள்

பொருளாதாரப் புழக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் சிறு தொழில்கள் இன்றியமையாதவை. ராஜ்ய சர்க்கார் சிறு தொழில் வளர்ச்சிக்காக 70-03 லக்ஷ ரூபாய் செலவில் கிண்டியில் தொழில் எஸ்டேட் ஏற்படுத்தியுள்ளனர். விருதுநகரில் 28.49. லக்ஷ ரூபாய் முதலீட்டில் மற்றொரு தொழில் எஸ்டேட் நிறுவனமாகிறது. ஈரோடில் 9-11 லக்ஷ ரூபாயில் தொழில் காலனி கட்டப்படுகிறது. ராஜ்ய சர்க்கார் திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயமுத்தூர் இங்கெல்லாம் 24.21-லக்ஷ ரூபாய் முதலீட்டில் சிறு தொழில் காலனிகள் கட்டவும், 2.91-லட்ச ரூபாயில் கன்யாகுமரி ஜில்லாவிலுள்ள மார்த்தாண்டத்தில் சிறு தொழில் காலனி கட்டவும் முற்பட்டுள்ளது.

கிராம தொழில்கள்

கிராம தொழில்களின் வளர்ச்சிக்காக இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் 40 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கிராம தொழில்களாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளவை சித்திரம், உலோகத்தால் உரு செய்தல், அச்சிடுதல், டையடித்தல், தோலினால் நாகரிகமான உபகரணங்கள் தயாரித்தல், ஜமக்காளங்கள், போர்வைகள், தறி போடுதல், சிற்பம் போன்றவைகளாகும்.

தொழில் கூட்டுறவு

சிறு ரக தொழில்கள், கிராமத் தொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரிசி, மட்பாண்டம், எண்ணெய் இவைபோன்ற தொழில்கள் கூட்டுறவில் வளர்ச்சியுறலாம். நமது ராஜ்யத்தில் 1400 வெல்லம் உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. அவற்றில் 13.05 லட்சம் மணங்கு பனைவெல்லம் தயாரிக்கப்பட்டன.

129 - பொது மின்சார இன்ஜினீரிங் தொழிற்சாலைகளும், தாவர எண்ணெய் உற்பத்திக்கு 107 தொழிற்சாலைகளும் நமது ராஜ்யத்தில் உள்ளன. கனரக தொழிற்சாலைகளாய் உள்ளவை வருமாறு: சர்க்கரை ஆலைகள் 6, சிமிண்ட் ஆலைகள் 3, கண்ணாடி தொழிற்சாலைகள் 6, தீப்பெட்டி தொழிற்சாலைகள் 24, ரசாயன தொழிற்சாலைகள் 34, சைக்கிள் தயாரிப்பு நிலயங்கள் 3, மோட்டார் கார்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் 3, மின்சார விளக்கு தயாரிக்கும் தொழிற்சாலை 1, பேப்பர் தயாரிக்கும் தொழிற்சாலை 1, சினிமா ஸ்டுடியோக்கள் 18, லாபராட்ரீகள் 9, இவையோடு பெரிய இரும்பு தொழிற்சாலை யொன்றும் சென்னையை யடுத்துள்ள பகுதியில் ஸ்தாபிக்க ஏற்பாடாகிறது. பெரிய அளவு இரும்பு இயந்திரப் பகுதிகளைத் தயாரிக்கவே அந்தத் தொழிற்சாலை நிறுவப் படுகிறது. சர்க்கரை ஆலை, சிமிண்ட், பஞ்சாலை இவற்றிற்குத் தேவையானவைகள் இங்கே தயாராகும். மீட்டர்கேஜ் ரயில் வாகனங்கள், பெட்டிகள் தயாரிப்பும் தொடங்கும்.

மண்பாண்ட தொழிலுக்கு உதவி

—○—

சென்னை மண்பாண்ட உற்பத்தியாளர் கிளைச் சங்கம் ஒன்று அரும்பாக்கம், அமைந்தகரை, சூளைமேடு, கீழ்ப்பாக்கம், அயனபுரம் முதலிய பேட்டைகளில் வசிக்கும் மண்பாண்ட உற்பத்தியாளர்களின் சமூக, பொருளாதார, தொழில் முன்னேற்றத்தைக் கருதி ஏற்படுத்தப்பட்டு பணியாற்றி வருகிறது. இச்சங்க வளர்ச்சிக்கு உயர் திரு. கே. பெருமாள் உடையார் அவர்கள் அவ்வப்போது தகுந்த ஆலோசனைகள் கொடுத்து உதவி புரிந்து வருகிறார்கள். கூடிய சீக்கிரத்தில் ஓர் கூட்டுறவு சொசைட்டி நிறுவி மெம்பர்களுக்கு தொழில் அபிவிருத்திக்கென சர்க்கார் கடன் உதவி பெற ஆவன செய்யப் பட்டும் வருகிறது. என்று காரியதரிசி. A. K. சுப்ரமணிய உடையார் அறிவிக்கிறார்.

கதை, கட்டுரை, கவிதை எழுதியனுப்புவோர் காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாக எழுதி தங்கள் முழு விலாசத்தையும் குறிப்பிட வேண்டும். பிரசுரமாகாதவற்றை திருப்பிப்பெற விரும்புவோர் அதற்கான தபால் பில்லையும் சேர்த்தனுப்பவும்.

ஆசிரியர்.

நேஷனல் பக்கெட்

டிரேட் மார்க்



CAMEL
BRAND

★

எங்கள் கைத்தொழில்சாலையிலிருந்து விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் தேவையான ஆலை கொப்பரை, நெல் கொப்பரை, மஞ்சள் கொப்பரை, பதனி கொப்பரை, நெல் அளக்கும் மரக்கால், கூடைகள், முறம், சல்லடை, குடம், ஏர் கொளுவு, மண்வெட்டி வகைகளும், தண்ணீர் இறைக்கும் சால், பக்கெட், தொட்டி ரகங்களும் எங்கள் கைத்தொழில் சாலையில் **கைதேர்ந்த வேலையாட்களைக் கொண்டு** நல்ல முறையில் சுத்தமாக செய்து பொதுஜனங்கள் சௌகர்யத்தை முன்னிட்டு விலை சகாயமாக விற்பனை செய்து வருகிறோம்.





தங்களுக்குத் தேவையான சாமான்களை எங்களிடம் வாங்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

உரிமையாளர் :

P. முஹமது ஹுசேன் ராவுத்தர்

பேப்ரிக்கேட்டர், Regd. No. 11

13-D, மயிலஞ்சந்தை, திருச்சிராப்பள்ளி-8.

சோப்புத் தயாரித்தல்

[திரு. கே. ஜி. ராஜு, கைத்தொழில் நூற்களாசிரியர்]

அன்றாடத் தேவைக்குரிய அவசியப் பொருள்களில் சோப் (சவுக்காரம்) ஒன்றாகும். சோப்பு வகைகளில் பல தரப் பட்டவையுள்ளன. ஸ்நானத்திற்கு உபயோகிக்கும் சோப்புகளில் எண்ணிறந்த வகைகள். துணிக்கு உபயோகிக்கும் சோப்புக்களில் பல தரப்பட்டவை. சரக்கின் அமைப்பு, நிறம், மணம், தரம் இவற்றி லெல்லாம்வித்தியாசப் பட்டவைகள் மார்க்கெட்டுகளில் உலவுகின்றன. சோப்புத் தயாரிப்பது ஓர் நல்ல தொழில், உற்சாகமாயும், உல்லாசமாயும் செய்யக் கூடியது. உழைப்புக்கேற்ற ஊதியத்தைத் தரவல்லது, சோப்பை தரத்தில் சிறந்ததாயும் தயாரிக்கலாம்; குறைந்ததாயும் தயாரிக்கலாம். தரத்தில் சிறந்ததாய்த் தயாரிப்பதானால் குறைந்த இலாபமே கிட்டும். தரத்தில் குறைந்த தாய்த் தயாரிப்பதானால் அதிக இலாபத்தையடையலாம். இது ஸ்நானத்திற்கான பரிமள சோப்பிற்கும், துணி வெளுப்பதற்கான சலவைச் சோப்பிற்கும் பொதுப்படையாய் அமைந்துள்ள நிலை.

சோப்புத் தயாரிப்பில் பல நுட்பங்களிருக்கின்றன. சொற்பலாபம் கிடைத்தாலும் சோப்பின் தரம் சிறப்பாய் இருக்கவேண்டும்என்ற எண்ணத்தோடு தயாரிப்போர் மூலப் பொருள்களை தக்கவாறு சேர்க்கத் தவறுவதில்லை. தயாரிக்கும் சோப்பு பணமாகி விட்டால் போது மென்ற எண்ணத்தில் கண்கட்டுவித்தைபோல் சொற்ப மூலப்பொருள்களிலும், மட்டரகமான மூலப் பொருள்களிலும் சோப்பு உருவையமைத்து விற்பனை செய்து பெருத்த லாபத்தை யடைவோரும் உண்டு. பெரும்பாலும் சலவை சோப் தயாரிப்போரிடையே தான் இந்த வித்தியாசமான போக்கைப் பெரும்பாலும் காணலாம். எனினும், ஸ்நான சோப் தயாரிப்போரிடையே இந்த மாறுபட்டத்தன்மை இடம் பெறாமலிருப்பதாய்க் கூறி விடுவதற்கில்லை.

சோப்புத் தொழிலில் நிலைத்துப் பெயரெடுக்கவும், தொழிலை நீடித்து நடத்தவும் விரும்புவோர் முக்கியமாய் நல்லரக சோப்புத் தயாரிப்பதிலேயே கருத்தைச் செலுத்துவர்; அதுதான்முறை.

சலவை சோப் வகைகள்

சோப்புத் தயாரிப்பதிலும் பலவித முறைகளை அனுசரிக்கின்றனர்.

COLD PROCESS — குளிர்ந்த முறை

HOT PROCESS—சூடு முறை

குளிர்ந்த முறையில் சோப் தயாரிப்போர் அடுப்படியை அணுகவேண்டியதில்லை.

சூடு முறையில் தயாரிக்க விரும்புவோருக்கு அடுப்பின் உதவி தேவை.

இந்த இரண்டுவித முறைகளிலும் மூலச் சரக்குகளை பலவாறு உபயோகிக்கின்றனர்.

Caustic Soda--காஸ்டிக் ஸோடா

காஸ்டிக் ஸோடாதான் சோப்புக்குத் தாய்ச் சரக்கு. காஸ்டிக்ஸோடாவில் தரத்தில் வித்தியாசப்பட்டவையும் உண்டு. ஏ. ஸி. ஐ. காஸ்டிக் ஸோடா வேக்காடு சக்தி அதிகமுள்ளது. மேட்டூர் கெமிக்கல்ஸ் ஸோடா அதற்கு அடுத்தபடியாய்க் கூறத்தக்கது. ஏ. ஸி. ஐ. ஸோடா ஒரு பவுண்டு சேர்க்கவேண்டுமானால், மேட்டூர் கெமிக்கல் ஸோடாவை ஒன்றேகால் பவுண்டு சேர்க்க வேண்டும்.

எண்ணெய் வகைகள்

தாய்ச் சரக்கான காஸ்டிக் ஸோடாவுக்கு அடுத்தப்படியாய்க் கூறவேண்டியது எண்ணெய் வகைகள். எந்த எண்ணெய்யிலும் கொழுப்பு சத்து இருக்கவே செய்கிறது. எனினும், தேங்காய் எண்ணெய்க் கிருப்பது போன்ற அமிதமான கொழுப்பு சத்து மற்றவைகளுக்கு இல்லையென்று கூறலாம். எனவே,சோப்புக்கு உகந்த—முதல்தரமான எண்ணெய் தேங்காயெண்ணெய்யே!

பொதுவாக காஸ்டிக் ஸோடாதிரவத்தையும்,தேங்காயெண்ணெய்யையும் அளவோடு கூட்டினால் சோப்பாக இறுகிவிடும். அதை தொழிலாய்ப் பயன் படுத்த முடியாது. சோப்புக்கான இலட்சணங்கள் பல. சோப்பில் பளபளப்பு, கனம், வண்ணம், மணம், நுரையுண்டாகும் நுட்பம் இவையெல்லாம் பொருந்தியிருக்கவேண்டும். அவைகளுக்கான மூலப்

பொருள்களைத் தேடிச் சேர்த்துத் தயாரித்தால் தான் தொழில் முறையில் பலனடையலாம். மார்க்கெட்டில் உலவும் சோப்பு வகைகளில் தமது சோப்பும் சிறந்த தொன்றாய் இருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு மூலச்சரக்குகளைச் சிறந்தவையாய்ச் சேர்ப்பதில் பின்னடையக் கூடாது.

தேங்கா யெண்ணெய்யே சோப்புத் தயாரிப்புக்கு உகந்ததென்றோம். தேங்காயெண்ணெய் சகாயவிலையில் கிடைப்பதில்லை. அதிகவிலையில் வாங்கி உபயோகித்தால் இலாபம் கிட்டுவது அரிது. எனவே, இதர எண்ணெய் வகைகளை உபயோகிக்க வேண்டிய அவசியம் நேர்கிறது.

கடலை எண்ணெய் என்னும்
மணிலா கொட்டை எண்ணெய்,
இலுப்பை எண்ணெய்,
புன்னை எண்ணெய்,
வேப்ப எண்ணெய்

இவற்றைக் கூட்டியும் சோப்புத் தயாரிக்கலாம்.

கனத்திற்கு—சைனா கிளே என்னும் ஓர்வகை மண் (CHINA CLAY)

பளபளப்புக்கும், மிருதுத்தன்மைக்கும்—ரோஸனம்

வெண்மை நிறத்துக்கு போரக் பவுடர்.

மஞ்சள் நிறத்துக்கு—கேசர் பவுடர்.

நறுமணத்திற்கு—புல்தைலம் ஜாஸ்மின் இரண்டில் ஒன்று. மிருதுத்தன்மைக்கும் நுரைக்கும் ஸிலிகேட் ஆவ் ஸோடா.

சோப்புத் தயாரிக்க விரும்புவோர்

1. காஸ்டிக் ஸோடா திரவம் ஊறுவதற்கான வாயகன்ற பாத்திரம்.

2. சோப்பு கிண்டவோ, காய்ச்சவோ தகுதியுள்ள ஜோடு தவலை அல்லது அண்டா.

3. சோப்பை கிண்ட துடுப்பு.

4. தயாரித்த சோப் கலவையை ஊற்றி ஆற லிட்டு முழு உருவமாக (Bar) எடுக்கத்தக்கதாய் மரப் பெட்டி. அந்தப் பெட்டி உடனே கோர்த்துக்கொள்ளவும், பிரித்துக்கொள்ளவும் கூடியதாய் இருக்க வேண்டும்.

5. பெட்டியிலிருந்து பிரித்ததும் பலகைபோல் தேவைப்படும் உயரத்துக்கு அறுத்தெடுக்கத் தகுதி வாய்ந்த இரண்டு அணைப் புக் கட்டைகள்.

6. மயிரிழைபோன்ற பித்தளை அல்லது இரும்பினாலான கம்பி.

7. எழுத்துக்கள் (விலாசம், பெயர் அல்லது மார்க்) பள்ளமாய் சோப்பில் பதியுமாறு செய்யப்பட்ட பித்தளை 'டைகள்'

8. "ப" வடிவில் மரப்பலகையில் செய்த பெட்டி. அதன் இரண்டு பக்கங்கள் திறந்திருக்க வேண்டும், அந்தப் பெட்டியில் விலாசம் அச்சிட்ட காகிதத்தை அணையவைத்து அதன் மேல் 1—டெஸன் சோப்புத்துண்டுகளை அடுக்கி சுலபமாய் மடித்து ஒட்டத்தக்கதாய் இருக்கவேண்டும்.

இவ்வளவு உபகரணங்களையும் தயாரித்துக் கொண்ட பின் சோப்புத் தயாரிப்பில் ஈடுபடலாம்.

(COLD PROCESS) குளிர்ந்த முறை

1. தேங்காயெண்ணெய் சேர் $13\frac{1}{2}$
2. காஸ்டிக் ஸோடா $2\frac{1}{4}$
3. ஸிலிகேட் ஆவ்ஸோடா பவுண்டு $\frac{3}{4}$
4. ரோஸனம் சேர் $\frac{3}{4}$
5. லெமன்கிரேஸ் ஆயில் என்னும்
6. புல்தைலம் ட்ராம் 1-முதல் 2
7. சிட்ரோனிலா ஆயில் ,, $\frac{3}{4}$
8. தண்ணீர் சேர் $12\frac{1}{2}$

ஸிலிகேட் ஆவ் சோடாவை $\frac{3}{4}$ சேர் தண்ணீரில் கலக்கவும். காஸ்டிக் ஸோடாவை 5 சேர் தண்ணீரில் முதல் நாளிரவே ஊறப்போடவும், ரோஸனத்தை சிறிதளவு எண்ணெய்யில் போட்டு காய்ச்சிக் கொள்ளவும்.

இவ்வாறு தயாரித்துக் கொண்டு சோப்பைக் கிண்ட துவக்கவும்.

தேங்கா யெண்ணெய் உள்ள பாண்டத்தில் காஸ்டிக் ஸோடாவை ஒருவர் ஊற்ற ஒருவர் துடுப்பால் கிண்ட இறுகிவரும். அப்போது ரோஸனம், ஸிலிகேட் ஸோடா, லெமன் கிரேஸ் ஆயில், சிட்ரோனிலா ஆயில் இவைகளை ஒவ்வொன்றாய் விட்டுக்கிண்டி நன்றாய் இறுகிவரும் சமயம் பெட்டியில் ஊற்றவும். பெட்டியில் ஈரத் துணியை ஒட்ட வைத்து அதன்மேல் ஊற்றி 12-மணி நேரம் சென்று பெட்டியைப் பிரிக்கவும். 12-மணி நேரத்தில் சோப்பிலுள்ள தண்ணீர் வற்றி உபயோகிக்கத் தக்கதாய் இருக்கும்.

அடுத்த இதழில் சோப்பு செய்யும் வேறு முறைகள் பிரசுரமாகும்.

RIGHTS BY THE AUTHOR.

அவளா? இவளா?

[திருமகன்]

சித்திரா பௌர்ணமி; வெண்திரை வானில் இயற்கை அழகுடன் சந்திரன் அடிவானத்திலிருந்து மெல்ல ஊர்ந்து உச்சிக்கு வந்து சேர்ந்தான். தென்றல் காற்று இலேசாக வீசியது. நானும் என் மனைவி கமலாவும் எங்கள் வீட்டு மாடியின் மீது குறுக்கும் நெடுக்குமாய் நடந்தபடி பேச்சு சுவாரசியத்தில் ஆழ்ந்திருந்தோம். அன்று தான் எங்கள் வாழ்நாளில் இன்ப நாளாய்த் தோன்றியது. வீட்டில் எல்லோரும் திருமணத்திற்காக விழுப்புரம் சென்று விட்டார்கள். வீடே நிசப்தமுற்று தொட்டிலில் கண்ணுறங்கும் சிசுவைப்போல் காட்சியளித்தது!

கமலா காதுக்கு இனிமையாகப் பாடுவாள். சில பாடல்களுக்கு பதம் பிடித்து நடனம் ஆடுவாள் என்றும் கேள்விப்பட்டிருந்தேன். ஆனால் அவள் ஆடல் அற்புதத்தை நான் பார்த்ததில்லை. என் முன்னே பாட சங்கோஜப் படுகிறவள் ஆடவா போகிறாள்? என்றைக்காவது கமலாவை ஆட வைத்துப்பார்க்கவேண்டுமென்று எதிர்பார்த்தேன். ஆனால் காலத்தின் சலுகை எங்களுக்கு கிட்டாத காரணம் தான்!

புதுமை இரவு, எங்கள் இன்ப வாழ்வை வேடிக்கைப் பார்க்க விழித்துக்கொண்டிருந்ததுபோலும்! தென்றல் விருந்திலே நடை ஓய்ந்து ஆயாசமாக ஈஸிச்சேரில் சாய்ந்தேன். என் அருகில் கமலா வந்து நின்றாள். வானத் தாரகைகள் மின்மினிப் பூச்சிகளைப் போல் கண் சிமிட்டியதை கூர்ந்துபார்த்திருந்தேன். தாரகை ஒன்று தன் ஆயுட் காலம் முடிவடைந்து இருப்பிடத்தைவிட்டு பூமியை நோக்கிப் பாய்ந்து வந்தது. அதன் இயற்கை அழகை கமலாவுக்கு காட்டும் விநாடிக்குள் திசை தெரியாமல் மறைந்துவிட்டது அத்தாரகை. “கமலா! தாரகையின் இயற்கை பொலிவைப் பார்த்தாயா?” என்று அவள் கரத்தைப் பிடித்து மெல்ல இழுத்தேன். கமலா வெடுக்கென்று என் கையை உதறித் தள்ளிவிட்டு மாடியை விட்டு கீழே இறங்கி விட்டாள். “கமலா! கமலா!” என்று கூப்பிட்டுக்கொண்டே அவள் பின் தொடர்ந்தேன் நான். கமலா கீழே இறங்கியே விட்டாள்.

கமலா நாணமுடையவள். நாட்கள் பலவாகியும் அவள் கூச்சம் மாறவில்லை. தலை தூக்காமல் கட்டிலில் குப்புற சாய்ந்துக் கிடந்தாள். அவளைப் பற்றித் தூக்கினேன். நயமான பேச்சாலும், சரசத்தாலும் அவளை என் வழிக்குக் கொண்டு வந்தேன். அவள் கருவிழிகள் இரண்டும் இமைக் கொட்டாமல் என்னையே உற்று நோக்கின. அவள் பார்வையின் கருத்தை என்னால் புரிந்துக்கொள்ள முடியவில்லை. “கமலா!” என்றேன். “அத்தான்!” என்ற பதில் குரல் கொடுத்தாள். தொடர்ந்து அவள் பேசினால்தானே? மௌனியானாள், என் மார்பின்மேல் குழந்தையைப்போல் சாய்ந்துக் கிடந்தாள்.

“கமலா! நீ இனிமையாகப் பாடக்கூடியவள். பாட்டுமட்டுமல்ல. பாட்டிற்கு ஏற்ற அபிநயமும் பிடிக்கக் கூடியவள். இன்று சித்திரா பௌர்ணமி. வசந்தகாலத் தென்றல் சில்லென்று வீசிக்கொண்டிருக்கிறது! உன் சங்கீத கானத்தோடு கூடிய நடனத்தைப் பார்ப்பதற்கு உச்சியிலே சந்திரன்கூட எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறான்” என்று கூறி கமலாவை பிடித்து இழுத்தேன். “ஊஹூம்! நான் வரமாட்டேன்! எனக்கு வெட்கமாய் இருக்கு” என்று தலையைத் திருப்பிக்கொண்டாள். நான் விட்டால்தானே? நயந்து பேசினேன். கெஞ்சினேன் என்று கூடச் சொல்லிவிடலாம். கடைசியில் கமலாவின் உள்ளம் இளகியே விட்டது. “ஆகட்டும்?” என்றாள். அவளின் அந்த வார்த்தை எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை யளித்தது. அவள் கரங்களைப் பிடித்திழுத்துக் கொண்டே மாடிக்குச் சென்றேன். என் அன்புப் பிடியில் சிக்கியபின் அவள் திமிறவேயில்லை.

மெல்லிய தென்றலோடு கமலாவின் கானமும் கலந்து என் மனத்தைப் பரவசத்திலாழ்த்தியது. நிசப்த முற்ற இரவில் கலை மணம் வீசும் அவள் கானம், ‘கணீர்’ என்று என் செவியிலும், மனத்திலும் எதிரொலித்தது: “தேவ கன்னிகையே என் வீட்டு மாடியில் வந்து விட்டாள்” என்று நம்பும்படிச் செய்துவிட்டது அவள் கானம். கமலா அவ்வளவு இனிமையாகப் பாடினாள்!

கமலா இரண்டு பாட்டுகளைப் பாடி முடித்தாள். பிறகு, லாவகமாக அபிநயம் பிடித்து நடனமாடினாள். அவளும் ஒரு நாட்டியக் கலா தேவி என்பதை நிரூபணம் செய்யும்படி கலைத்திறன் அவளிடம் பொதிந்திருந்தது. கமலா பம்பரம்போல் சுழன்று ஆடுவதைக் கண் சிமிட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தேன். "கமலாவுக்கு இவ்வளவு நடனத் தேர்ச்சி இருக்குமென்று நான் எண்ணியதில்லை. அவள் ஆட்டம் முடிவடைந்தது. "அபாரம்!......அபாரம்!" என்று என் பாராட்டுதலை கைதட்டல் மூலம் அவளுக்குச் சமர்ப்பித்தேன். என் கைத்தட்டல் கமலாவுக்கு வெட்கத்தை கிளறிவிட்டது போலும்! தலை நிமிர்ந்து பார்க்காமல் வெங்கலச் சிலையாக நின்று விட்டாள் அவள். ஆனால் என் கரங்கள் பதைத்தன. ஓடோடியும் சென்றேன். கமலாவை இறுகத்தழுவி அவள் நெற்றியிலே முத்தமிட்டேன். ஆம், அது அன்பு முத்தம்! ஆசை முத்தம்! இன்ப முத்தம்! இனிமையான முத்தம்!

ஆற்றிலே நீந்தி விளையாடியவளைப் போல் அவள் உடல் முழுதும் நனைந்திருந்தது. ஆட்டம் முடிந்தாலும் அவள் முகத்தில் அரும்பும் வியர்வை நிற்கவில்லை. மேல் சுவாசம் ஓய நேரம் பிடித்தது. இப்படி ஆயாசத்துடன் வேதனைப் படுவதைக் காண என் மனம் இருப்புக்கொள்ளவில்லை. அவளை என் இரு கரங்களாலும் தூக்கிச் சென்று ஈஸிச் சேரில் படுக்கவைத்தேன். அவள் நாவினால் உதடுகளை ஈரமாக்குவதைக் கண்டு பாய்ந்தோடிச் சென்று வெள்ளி டம்ளரில் தண்ணீர் எடுத்துவந்து கொடுத்தேன். ஆவலோடு அதை வாங்கி அருந்தினாள். பிறகு புரண்டு படுத்தாள். நான் ஒதுங்கி உட்கார்ந்தேன். சீக்கிரமாகவே அவள் நித்திரையின் வசமானாள்.

கமலா ஆடிப்பாடி ஆயாசமுற்றுத் தூங்கினாள். நானோ தாபத்தால் தத்தளித்தேன். சந்திரன் உச்சியை விட்டு மெல்ல நகர ஆரம்பித்தான். கமலா காலம் போவதே தெரியாமல் அயர்ந்துத் தூங்கிக்கொண்டிருந்தாள்.

அன்றைய இரவு கழிந்ததே தெரியவில்லை. காலமென்னும் மய்க்க மருந்தை எனக்கும் கொஞ்சம் ஊட்டிவிட்டாள் அந்த தேவதை. என் நிதானம் தவறியது. சித்திரா பௌர்ணமி சிங்கார புன்னகையுடன் மேற்றிசை வாயிலை அடைந்தது. ஆம்; சந்திரன் மேற்றிசையில் சாய்ந்து விட்டான். நானும் படுக்கையில் சாய்ந்து கண்ணயர்ந்து விட்டேன்,

பொழுது விடிந்தது. கதிரவன் வருகையைக்கண்டு பறவைகள் பள்ளுப்பாடின. செங்கதிரோன் ஜன்னல் வழியாய் என் உடலை 'சுளீர்' என்று தாக்கினான். அவன் செய்த தொண்டிற்காக என் முதல் வணக்கத்தை காலையில் செலுத்தி விட்டு திரும்பினேன். கமலா ஒருகிளாஸ் 'பெட்' காப்பியுடன் எதிரே நின்றிருந்தாள். இரண்டாவதாய் என் நன்றியைஅவளுக்குச் செலுத்திவிட்டு காப்பியைப் பெற்றுக் கொண்டேன். காப்பியை கொடுத்து விட்டு கமலா 'விர்' ரென்று பறந்துவிட்டாள். காப்பிக் குடித்து விட்டு கட்டிலின்மீதேமீண்டும் குப்புறப்படுத்துக் கிடந்தேன்.

"அத்தான்! கமலாவின் பரத நாட்டியத்தை எதிர்பார்த்துகிட்டு கிடக்கிறீர்களா?" என்று கிண்டல் செய்தபடி என் அருகே வந்தாள் கமலா.

நான் படுக்கையை விட்டு எழுந்திருந்தேன். சுவர் கடிகாரம் மணி எட்டு அடித்து ஓய்ந்தது. அவசரம் அவசரமாக காலை வேலைகளை கவனித்தேன். கமலா 'டிபன்' தயார் செய்து வைத்து காத்திருந்தாள். மணியாகி விட்டபடியால் அரை குறையாக டிபனை முடித்துக்கொண்டு ஆபீஸுக்குப் புறப்பட்டு விட்டேன்.

ஆபீஸில் இருந்து மாலை 5 மணிக்கு வீடு திரும்பினேன். கமலா அன்றோ என்றுமில்லா பொலிவுடன் தன்னை அலங்காரம் செய்துகொண்டு தெருவாயிற்படியில் நின்று எதிர்பார்த்திருந்தாள் என் வருகையை, நான் குதூகலத்துடன் வீட்டினுள் நுழைந்தேன். என்உடைகளை மாற்றிக்கொண்டு வருவதற்குள்ளாக, "அத்தான், காப்பி கொண்டு வரட்டுமா? என்று கேட்டாள். "ஊம்" என்றேன், அவள் காப்பியுடன் ஓர் கவரையும் கொண்டு வந்து கொடுத்தாள். நான் அவசரமாக கவரைப் பிரித்தேன். கமலா கவரைப் பிடுங்கிக்கொண்டு, "காப்பிசாப்பிட்டதும் படித்தால்போகுது, அதற்குள்என்ன முழுகிவிடப் போகிறது," என்றாள். கமலா சொல்வது நியாயந்தானே யென்றெண்ணி முதலில் காப்பியை சாப்பிட்டேன். பிறகு, அவள் கவரைக் கொடுத்தால் தானே நான் பிரிக்கவும், படிக்கவும் முடியும்?

"இனி கவரைக் கொடுக்க தயவு செய்யலாம் கமலா" என்று அவள் கன்னத்தில் லேசாகத் தட்டினேன. அவள் சிரித்துக்கொண்டே அக்கடிதத்தை என்னிடம் கொடுத்தாள். கடிதத்தைப் பிரித்துப் பார்த்தேன். கமலா. "அத்தான்! கடிதம் எங்கிருந்து வந்திருக்கிறது" என்று கேட்டாள்.

144854

"புதுச்சேரியிலிருந்து வந்திருக்கிறது" என்றேன். அவ்வார்த்தையைக் கேட்டதும் கமலாவின் முகத்தில் அன்புப் பொங்கித் ததும்பியது.

நான் கடிதத்தைப் பிரித்து வாசித்தேன் என்னை அறியாமல் என் கண்கள் சுழன்றன. என் மனதில் எண்ண அலைகள் மேலோங்கி மோதின. நான் கற்பனை செய்து--எதிர்பார்த்திருந்தது—என் கண்களுக்கு சூன்ய காட்சியளித்தது. ஆத்திரத்தை என்னால் அடக்க முடியவில்லை. "முடியாது! முடியாது!" என்று என்னையும் அறியாமல் புலம்பினேன். நான் இப்படி உளறியதைப் பார்த்து கமலா, பயந்து போய்விட்டாள். நான் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தவன் போல் நாற்காலியில் அமர்ந்து விட்டேன்.

வீராம்பட்டினம் செங்கழனி அம்மன் தேர்விழா என்றால் நூறு மைல்களுக்கு அப்பால் இருந்தும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் சென்று குவிந்து விடுவார்கள். சக்தி வாய்ந்த தெய்வம் என்று பெயர் பெற்றிருந்தது வீராம்பட்டினம் செங்கழனி அம்மன். வீராம்பட்டினம், பஸ், ரயில், வசதிகளை ஒருங்கே பெற்றது. எங்கள் திருமணம் நடை பெற்ற மறு ஆண்டில் தேர் விழா பார்ப்பதற்கு புதுவையிலிருந்து எங்களுக்கு அழைப்புக் கடிதம் வந்தது. புதுவை நகர் தான் கமலாவின் பிறந்த ஊர்.

அவ்வாண்டு குடும்பத்துடன் (மாமன், மாமி நீங்கலாக) படையெடுத்தோம் வீராம்பட்டினத்திற்கு—நாங்கள் பஸ்ஸில் செல்லவில்லை. கடற்கரை ஓரமாகவே ஆழியின் எழிலை ரசித்துக்கொண்டு மணற் பரப்பில் ஒய்யாரமாக பாதச் சவாரி செய்தோம்! கடற் காற்று "உ...ஸ்...ஸ்" என்றுவீசிக் கொண்டிருந்தது. இன்பமாய் நடந்து கொண்டிருந்த சமயம் அமைதியைக் குலைக்கும் சூறுவளிக் காற்று திடுதிப்பென்று வீசத்தலைப்பட்டது. கடற்கரை மணல் பறந்து எங்கள் கண்களை மறைத்தது. அவ்வழியில் சென்றவர்களெல்லாம் மூலைக்கொருவராக திசை தெரியாமல் ஓடினர். கமலா எந்த திசையையோ நோக்கி ஓடிக்கொண்டிருந்தாள். கண்களைக் கசக்கி விட்டுக்கொண்டு ஓரப்பார்வையில் கவனித்தேன். "மாமா!" என்று என்னை கட்டி அணைத்துக்கொண்டாள் அனுசூயா! பேசுவதற்கு வெட்கப்படுகிறவள்; நாணத்துடன் ஓடி மறைவாள் சாதாரணகாலங்களில், அவள் அணைப்பிலே நான் அகப்பட்டுக் கொண்டு நின்றேன். பாசபந்தத்தை சொல்லவாவேண்டும்? ஏதோ ஓர்வகை மனப் பிரமை; இனந்தெரியாத உணர்ச்சிக்கு இலக்கானேன். ஆபத்துவேளையில் கூட ஆசை தலை நீட்டியது விந்தைதானே! அனுசூயா வெறிக்க வெறிக்கப் பார்த்தாள். என் நிலையை மாறியே விட்டது; நிதானமிழந்தேன். அனுவின் இதழ்களில் என் இதழை பொத்திவிட்டேன்.

சிறிது நேரத்தில் ஆர்ப்பரித்தக் காற்று தணிய ஆரம்பித்தது. அமைதி நிலவியபின் அனு என் பிடியில் இருந்து விலகினாள். தொலை தூரத்தில் இருந்து கமலா எங்களை நோக்கி வந்து கொண்டிருந்தாள். நடந்த சம்பவம் என் மனதைச் சிதைத்தது. நான் அனுவை அடைந்துவிட வேண்டுமென்று ஆவல் கொண்டேன், அது நடந்து ஓராண்டு ஆகியது.

கமலா என் கையிலிருந்தக் கடிதத்தை வாங்கிப் படித்தாள். படிக்கப் படிக்க பரவசமடைந்துகொண்டே போனாள். "காலா காலத்தில் தன் தங்கைக்கு வரன் வரப் போகிறான். நல்ல இடத்துப் பிள்ளையாம். எஸ். எஸ். எல். ஸி. வரை மாப்பிள்ளை படித்திருக்கானும். புதுவை ராஜ்ய சர்க்கார் ஆபீஸில்வேலை பார்க்கிறானும். அதனால்நம்ம சம்மதத்தை கேட்க விரும்பி அழைத்திருக்கிறார்கள். அவள் அதிர்ஷ்டசாலி. உள்ளூரிலேயே மாப்பிள்ளை கிடைத்திருக்கிறார். இந்த மங்களச் செய்தியைப் படித்துவிட்டு ஏன் உங்கள் மண்டையை உடைத்துக் கொண்டு ஏதோதோ உளறுகிறீர்களே?" என்று கபடமறியாத கமலா கேட்டாள்.

"என்ன கமலா! என் மனப்போராட்டத்தைப் புரிந்துக்கொள்ளாமல் பேசுகிறாய்? உன்னிடம் பட்டவர்த்தனமாகச் சொல்லவெட்கப்படுகிறேன். அதே சமயத்தில் உன் மனமும் சஞ்சலப்படும் என்று வேதனைப்படுகிறேன். ஓர் எண்ணம் என் மனதிலே வேரூன்றி விட்டது. அதை மறந்துவிடலாமென்றாலும் அந்த உருவம் என் கண் முன்னே காட்சியளிப்பதுபோல் இருக்கிறது. மனப் பீடத்தில் ஓவியமாய் வரைந்து ஜீவன் இல்லா சித்திரமாக வைத்திருக்கிறேன்" என்று கூறினேன்.

அத்தான்! அந்த உயிரில்லா சித்திரத்தைத் தூக்கி வெளியில் எறிந்து விடுங்கள்! நான் தான் ஜீவனுள்ள ஓவியமாய் இருக்கிறேனே" என்றாள் குறும்பாக கமலா!

"நீ பொறுமைப் படுவாய்! உன் மனமாற வரவேற்கமாட்டாய். உன் கண்களில் நீர் வழியும், இல்லையில்லை ரத்தம் வழியும்" என்றேன் பெருத்த தொனியில்.

பெண்களை அவ்வளவு கேவலமாக நினைத்துவிடாதீர்கள். பொறுமை, பெண்க

ளுக்கு அணிகலன்தான். உங்கள் மனப் போக்கை நான் தெரிந்துகொண்டால் உங்கள் காரியத்துக்கு தடை ஏற்பட்டு விடுமா? ஒளி மறைவு இல்லாமல் என்னிடம் சொல்லுங்கள்" என்று கமலா கெஞ்சிக் கேட்டாள்.

என்ன சொல்லுவது என்றே புரியவில்லை. கமலா, என்னையே தன் உயிராக வைத்துத் தொழுகிறாள். நான் ஏன் அவளை துரோகம் செய்யவேண்டும்? நேர்மைக்கு விரோதமாக நடந்தால் கமலாவின் கதி என்னவாகும்? உயிரையே தியாகம் செய்து விடவும் துணிந்துவிடுவாளே! எந்த மனைவி தான் சம்மதிப்பாள்? என் முடிவுக்குத் தன் வாழ்க்கையை பாழாக்கி பாழுங்கிணற்றில் போய் விழவா அவள் ஆசைப்படுவாள்!' என்ற சர்ச்சைகள் மனதில் கிளர்ந்தெழுந்தன. "என்னவானாலும் சரி அனுவை அடைந்தே தீருவது" என்று அழுத்தமாய்ச் சொன்னேன். சொன்னேன் என்று சொல்வதைவிட உளறினேன் என்று கூறலாம்.

அத்தான்! "அனு!" என்று சொன்னீர்களே? இங்கே கமலா தானே இருக்கிறாள்.

"ஆம் கமலா! நான் நிதானத்தை இழந்து ஏதோ உளறி விட்டேன்" என்றேன்.

"அப்போ நீங்கள் இவ்வளவு நேரம் பிதற்றியது யாரைப் பற்றி" என்றாள் கமலா.

பிதற்றவில்லை கமலா! நான் பிதற்றவில்லை!. உண்மையைத்தான் சொல்லுகிறேன். செங்கழனி அம்மன் தேர் விழாவுக்கு சென்றிருந்தது உனக்கு ஞாபகம் இல்லையா? சென்ற ஆண்டு ஏனோ உன் தங்கை அனுசூயாவையும் அங்கே அழைத்து வந்தாய்?! அன்றே அவள் உருவம் என் மனக் கோயிலில் இடம் பெற்று விட்டது. நான்வேடிக்கையாக அவளை உற்று நோக்கி விட்டேன். அனு குறும்புச் சிரிப்புடன் என்னைக் கடைக்கண்ணால் பார்த்தது உலக செங்கதிரோன் கூட எங்கள் கண்கள் பேசிக் கொண்டதை பார்த்திருக்க மாட்டான் அவன் செல்லும் வேகத்தில்! அவள் புன்னகையில் மயக்கங்கொண்ட நான் உன்னை மறந்தேன்! அன்று ஒவ்வொரு நிமிஷமும் நாங்கள் லாவகமாக பார்த்துச் சிரித்துக் கொண்டோம்! என் மனம் அவளை வட்டமிட்டது. தாராளமாக கருத்தை பரிமாறிக்கொள்ள காலம் சரியில்லாததால், மெல்லிய அவள் கரத்தால் எழுதப்பட்ட ஓர் துண்டு கடிதம் என் மீது வந்து விழுந்தது, நாம் வீடு வந்து சேர்ந்ததும். அதைப்படித்தேன்; "நீங்கள் உண்மையில் என்னை விரும்புவதாய் இருந்தால் எப்படியாவது திருமணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள். நான் உங்களை கணவராய் மனத்தில் எண்ணி விட்டதால் இனி வேறு யாரையும் மணக்கமாட்டேன்" என்று அனு எழுதியிருந்தாள். "அனு உனக்கும் உலகத்திற்கும் புதியவளல்ல! நீ வந்தக் கொடியிலே பின் தொடர்ந்து தோன்றிய உன் சகோதரி. வாழ்விலும் அவள் உன்னைத் தொடர்ந்திருக்கட்டுமே!" என்று என் உள்ளத்துடிப்பை வெளியிட்டுக் காட்டினேன் அவளிடத்தில்.

கமலாவின் கண்களில் கங்கை புரண்டது. அவள் இருதயம் வெடித்து விழுந்து விடுகிறவள்போல் விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள். "அத்தான்! உங்கள் வார்த்தை என் உள்ளத்தை சுட்டெரிக்கிறது. நீங்கள் கபட உள்ளத்தோடுஎன்னிடம் மகுடிபிடித்து ஆடியது இப்போது வெள்ளிடை மலைபோல் தெரிகிறது. என்னைக் கொன்று விடுங்கள். என் பிணத்தின்மீது நடந்து சென்று உங்கள் எண்ணத்தை முடித்துக் கொள்ளுங்கள், ஊம்! ஏன் நிற்கிறீர்கள்" என்று என்னைப் பிடித்து உலுக்கினாள். அவள் உக்கிரகாளியைப்போல் பயங்கரமாய்க் காணப்பட்டாள். நானும் அதிர்ச்சியடைந்தேன்.

"கமலா! என் முடிவை மாற்ற முடியாது. என் விருப்பத்தில் நீ குறுக்கிட வேண்டாம். அனு, என்னைத்தான் மணம் புரிந்துகொள்வேன் என்று உறுதி கொண்டு விட்டாள். ஏன்? அவள் மனம் என்னை நாடி விட்டது! அவள் உனக்கு துணையாக இருக்கப்போவதில் நீ ஏன் பொறாமை கொள்ளவேண்டும்? மனைவியிருக்கும்போது மறுதாரமேன் என்று நீயும் கேட்பாய்! மற்றவர்களும் கேட்பார்கள். மனம் மற்றவர்கள் கேட்பார்களே, என்ன பதில் சொல்கிறது என்று அஞ்சுகிறது? தன் போக்கில் எதையெதையெல்லாமோ செய்து விடுகிறது மனம்" என்று தழுதழுத்தக் குரலில் இயந்திரம்போல் பேசினேன்.

ஆம்! நான் கேட்பதென்ன? மற்றவர்கள் கேட்பதென்ன? உங்கள் போக்கைப் பார்த்து உலகமே சிரிக்கப்போகிறது" என்று வெடுக்கென்று கூறினாள் அவள்.

கமலாவின் கண்கள் அனற்பொறிகளை வீசின! ஆத்திரத்தை அவளால் அடக்க முடியவில்லை. "அத்தான்! நீங்கள் கனவு காண்பது இந்த ஜன்மத்தில் நடந்தேறாத விஷயம். என் உயிர் உள்ளவரையில் இந்த வீட்டில் வேறு எவளும் வாழ உரிமை கிடையாது. தங்கைக்காக அக்காள் தன் தாலியைப் பறி கொடுப்பாளா? வேறொரு பெண் என் வீட்டு வாசல் ஏற அருகதை ஏது? ஒருமானமுள்ள—படித்த தமிழன்,

தங்கச் சிலையாக ஓர் மனைவியிருக்க வேறு ஒரு பெண்ணை மணந்து வீட்டு விளக்கை அணைக்க ஆர்வப்படுவானா? வெட்கக் கேடு! வாழ்க்கைத் தோணியில் முதல்படி ஏறி இன்ப சுகங்களை அனுபவித்தவள் நான். கிழவியாக மாறிவிடவில்லை. என் தங்கை மீது அன்பு காட்டுகிறீர்கள், வேண்டாம் அத்தான், வேண்டாம்! நேற்றைய இரவுகூட பௌர்ணமியில், ஆனந்தமாக ஆடவும் பாடவும் சொன்னீர்கள். உங்கள் அபிப்பிராயப்படி ஆடினேன், பாடினேன். நீங்கள் ஆனந்தங் கொண்டீர்கள். கொஞ்சினீர்கள். ஆனால் அனுவின் காதலுக்காக என் வாழ்க்கையைக் கொலை செய்ய எத்தனிக்கிறீர்களே, இது அடுக்குமா?" என்று கூறி என் காலில் விழுந்து, கோவென்று அழுதாள். அவள் கோலம் என் மனத்தைத் தொல்லைப்படுத்தி விட்டதென்றே சொல்லலாம். எனினும், புது உருவத்தில் மோகங்கொண்ட என் உள்ளம் இளகவில்லை. "கமலா! அனு வேறு ஒருவனுக்கு வாழ்க்கைப் பட நான் சம்மதிக்கப் போவதில்லை!" என்று கூறி கமலாவை உதறித் தள்ளினேன்.

நான் தள்ளிய வேகத்தில் கமலா பக்கத்தில் இருக்கும் அலமாரியில் போய் மோதினாள். அவள் மோதிய வேகத்தில் கண்ணாடி சுக்கு நூறாய்ச் சிதறியது. கமலாவின் நெற்றியில் கண்ணாடித்தூள் தைத்து ரத்தம் வடியவாரம்பித்தது. கமலா அதை பொருட்படுத்தாமல் ருத்திர காளியைப் போல் வீறிட்டு எழுந்திருந்தாள். "நீங்கள் அனுவின் வாழ்வை பாழாக்க எத்தனிக்கிறீர்கள்! அவள் உங்களை விரும்புவதாக அவள்மேல் அபாண்டப் பழியை வேறே சுமத்துகிறீர்கள். அவள் உங்களைக் காதலிக்கிறாள் என்பதை நான் நம்பமாட்டேன். அவள் அப்பேர்ப்பட்டப் பெண்ணுமல்ல, என்னோடு பிறந்து வளர்ந்தவளைப் பற்றி எனக்குத் தெரியாதா" என்று என்னை குறுக்கே மடக்கிப் பேசினாள் கமலா.

"கமலா! நீ நினைப்பது தவறு. அவள் என்னை நேசிப்பது உண்மை. அனு வேறொருவனுக்கு வாழ்க்கைப்பட மாட்டாள், அவள் வாழ்க்கையில் நீ குறுக்கிடுவது தவறுதான் என்பதை உணர்ந்து விலகிவிடு. அவளை நான் மணந்து கொண்டால் வீட்டு வேலைப்பாரம் உனக்கு குறைந்து விடும்" என்று அவளை சமாதானம் செய்வதைப்போல் அவள் முகத்தில் வழியும் ரத்தத்தை துடைத்து விட்டேன்.

கமலா கோபந்தணிந்து நிதானம் அடைந்தாள். சரி உங்கள் இஷ்டம் போல் ஆகட்டும், நானே முன் நின்று என் தங்கையை மணமுடித்து வைக்கிறேன். ஆனால் அம்மா அப்பாவின் சம்மதம் இருக்கவேண்டும். அவர்கள் முடிவுக்கு என் பூரண உழைப்பை பயன்படுத்தி உதவி செய்கிறேன்" என்றாள். கமலா இப்படி உடனே மாறிவிடுவாள் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

நாட்கள் ஐந்து உருண்டோடின. கமலாவை புதுவைக்கு தனிமையாக பஸ் ஏற்றி அனுப்பினேன்.

* * *

கமலா சென்னையை விட்டு பிரிந்து 10 நாட்கள் ஆகிவிட்டன. அவளிடம் இருந்து எந்த விதமான கடிதமும் வரவில்லை.

ஓர்நாள்

காலை நேரம்; தெரு வாசலில் "ஸார்...... ஸார்" என்று யாரோ கூப்பிடும்சப்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தேன். தபால்காரன் ஓர் கவரை கொடுத்துவிட்டுச் சென்றான். கடிதம் கமலாவினால் எழுதப்பட்டிருந்தது.

அன்புள்ள அத்தான் !

நான் சௌக்கியமாக வீடுவந்து சேர்ந்தேன். தங்களுக்குக் கடிதம்எழுதகாலதாமதமானதற்கு மன்னிக்கவும். என் தங்கையை நீங்கள் மணப்பதற்கு நான் மனப் பூர்வமாய் சம்மதித்தேன். என் பெற்றோரும் சம்மதித்து விட்டார்கள். நீங்கள் சந்தோஷமாய் வாழவேண்டும் என்பது தான் என் ஆசை. அதில் நான் குறுக்கிட விரும்பவில்லை. என் உரிமைப் பொருளை வேறொருத்தி பறித்துக் கொள்வதை நான் பார்த்திருக்க முடியாது. என் நெஞ்சம் குமுறி வெடித்து விடுவதைக் காட்டிலும் நானாக மறைந்து விடுவது மேல் என்று முடிவு செய்து விட்டேன் என்பதை தங்களிடம் கடைசிமுறையாக இக்கடிதத்தின் மூலம் தெரிவித்து விடை பெற்றுக் கொள்ளுகிறேன். அனுவும் தாங்களும் மகிழ்ச்சியாய் வாழ ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன். இப்படிக்கு,

தங்கள் அன்புள்ள மனைவி கமலா.

என் கண்களில் கண்ணீர் புரண்டோடியது. இருதயம் துடித்தது! கடிதத்தை படிக்கவே என் உடல் நடுக்கங்கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தேன். "இவ்வளவிற்கும் அனுவின் மேல் கொண்டகாதல்தானே காரணம் என்று என்னையே நொந்தபடி பிரயாணத்துக்குத் தயாராய் வெளியில் வந்தேன்.

ஓர் ஆள் சைகிலில் வந்து இறங்கினான் என் வீட்டு வாசலின் முன்னே, அவன் தான் தந்தி சேவகன். "குமார் இருக்கிறாரா?" என்று கேட்டான். "நானே தான் குமார்", என்றதும் ஓர்கவரை என்னிடம் கொடுத்தான். கவரைப்பிரித்தேன், "கமலா இன்று காலைமரணமடைந்து விட்டாள்" என்ற வாசகத்தைப் படித்ததும் என் சுய உணர்வை இழந்தேன்.*

MANIYAM INDUSTRIAL & ENGINEERING WORKS,

Government Approved Fabricator & Contractor,

(Regd. No. S. 5.)

A. C. C. CEMENT STOCKIST

32, Sankari Road, Trichengode, (Salem Dt.)

(சென்னை அரசினர் உதவி பெற்றது)

உயர்ந்த ரகம், உறுதி வாய்ந்த சகல இரும்புப் பெட்டிகள், கேஷ் பாக்ஸ், வாளிகள், பனைவெல்லக் கொப்பரைகள், குடம், தண்ணீர் டாங்குகள் முதலிய பொருள்களும், விவசாயக்கருவிகளும், கட்டிட சாமான்களும், சகல விதமான லேத்து வேலைகளும், வெல்டிங்கும் செய்து கொடுக்கப்படும்.

T. M. சுப்ரமணிய ஆச்சாரி.

Please Contact Us

For all your Iron & Steel Consumer goods Requirements of

Door Hinges, Door Pegs, Wall Pegs, Gate Pegs, Chains, Rings, Nagapasams, Rose Handnails, Flat Headnails Hand Nails, Brass Nails Iron Oven.

&

Agricultural Implements, Sugarcane Pans, G. I. Kawalaisal, G. I. Sals, Buckets, Pots, Drums, Thavas, Cake Pans, Oil Bonds Cakepipes (Iron &Brass) Etc., Etc,,Etc.

P. SUBRAMANIYA CHETTY

(Government Approved Fabricator)

Iron and Hardware Merchants,

Manufacturers and Wholesale suppliers of Consumer Goods.

H. O:
8/21, Wall Tax Road,
Madras-3.

BRANCH :
94, Rasappa Chetty Street,
Madras-3.

Office: 32-A, Wall Tax Road, Park Town Madras-3

மாணவர் மன்றம்

சென்னை எடப்பாளையம் நகராண்மைக்கழக உயர்தர ஆரம்பப்பாடசாலையில், 2—8—'58 சனிக்கிழமை காலை 10-45 மணிக்கு, மாணவர் மன்றத் துவக்க விழா நடைபெற்றது. சென்னை நகரமன்ற ஆல்டர்மேன் உயர் திரு. கே. பெருமாள் உடையர்ர் அவர்கள் தலைமை வகிக்க, உயர் திரு. புலவர் தணிகை உலகநாதன் அவர்களால் மன்றம் துவக்கி வைக்கப்பட்டது. இறைவணக்கத்திற்குப் பிறகு, மேற்படி மன்ற உபதலைவர் திரு. ஆ. கோவிந்தராஜுலு அவர்கள், உயர் திரு. கே. பெருமாள் உடையார் அவர்களை, "வில் ஏர் உழவர்" என்றும், புலவர். தணிகை உலகநாதன் அவர்களை, "சொல் ஏர் உழவர்" என்றும் சிறப்பித்து வரவேற்றார்.

தலைவர் தன் தலைமை உரையில் நல்ல விஷயங்களில் ஈடுபடவேண்டும்; இளமையில் நற்குணமுடையவர்களாகத் திகழவேண்டும் என்றும், திருமதி தேஷ்முக் பெண்களுக்குத் துணி கொடுப்பதன் மூலம் செய்யும் சேவையினையும், ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்திப் பேசினார்.

புலவர் தணிகை உலகநாதன் அவர்கள், மேற்படி மன்றத்தைத் திறந்து வைத்து மாணவ, மாணவிகள் இத்தகைய மன்றத்தின் மூலம் அடையும் நன்மைகளையும், குறிப்பாக முதல் தெய்வங்கள், தாய், தந்தையர் என்பதையும், பொய் பேசக்கூடாது, வீரமுள்ளவர்களாகத் திகழவேண்டும் என்ற கருத்துக்களை வீரசிவாஜி, உலகம் போற்றும் உத்தமரான காந்தி, திரு. வி. க. முதலியவர்களின் வாழ்க்கையின், இளமைப் பருவத்தில் நடந்த நிகழ்ச்சிகளின் மூலமும், விளக்கினார். பாரதியார் இளமையிலேயே பாட்டுப் பாடுவதில் கவனம் செலுத்தினதால்தான் பின்னர், பெரிய கவியாக மாறினார் என்பதையும், குருபக்தி என்பதை ஏகலைவனின் கதையின் மூலமும் எடுத்துரைத்தார்.

டிவிஷன் கவுன்சிலர் திரு. எம். பார்த்தசாரதி அவர்கள், கற்க கசடு அற; கற்க அதற்குத்தக, நூல் தெரிந்து சீலத்து ஒழுகு; கல்வியுடைய ஒருவனை அரசனும் விரும்பும் என்ற கருத்துக்களை சிறு கதைகள் மூலம் தெளிவுப் படுத்தினார்.

இறுதியில் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. டி. வி. சுப்பிரமணியம் அவர்கள், சொற்பொழிவாளர்கள் கூறிய கருத்துக்களை, மீண்டுமொருமுறை, மனதில் சிலையில் எழுத்துப்போல் பதியும்படி கூறி நன்றி கூற நாட்டுப்பாடலுடன் கூட்டம் இனிது முடிந்தது என்று சங்கச்செயலாளர் திரு. ஆ. இராகவன் அறிவிக்கிறார்.

Arumugam Tailoring House

GOVERNMENT CERTIFIED TAILOR &

SUPPLIER OF READY MADE GOODS FROM

BUCKINGAM AND CARNATIC FABRICS

Shortly opening New Show-room

No. 16, Arunachala Naicken Road,

CHINTADRIPET, MADRAS-2

A. ARUMUGAM.

PROPRIETOR.

கருத்துரை :

நாடோடி மன்னன்

அருமையான ஒளிப்பதிவும், சிறப்பான நடிப்பும், காதுக்கும் கருத்துக்கும் இனிமையான பாடல்களும் கொண்ட இந்த அற்புதக் கலைப் படைப்பைத் தமிழ் நாடு மட்டுமல்ல உலகம் முழுதுமே கண்டு களிக்கவேண்டும் என்பது தான்.

“நர்டோடி மன்னன்” படத்தைப் பார்த்ததும் ஒரு தமிழனுக்கு ஏற்படும் எண்ணம்; ஆவல். திறமையான புலமையெனில் பிறநாட்டார் நமை வணக்கம் செய்தல் வேண்டும் அல்லவா? ‘எம்ஜியார்’ பட நிலையத்துக்கு ‘நாடோடி மன்னன்’ ஒரு மகத்தான முதல் வெற்றி. திரு. எம்.ஜி. ஆர். தாம் ஒரு சிறந்த நடிகர் மட்டுமல்ல; டைரக்டரும் கூட என்பதையும் ருசுப்பித்து விட்டார்.

‘ஜெண்டாக் கைதி’ என்ற ஆங்கில நாவலைத் தழுவி, வீரப்பன், வித்வான் லட்சுமணன், எஸ். கே. டி. சாமி ஆகிய மூவரும் திரைக் கதையை அமைந்திருக்கின்றனர். மேலை நாட்டுக் கதையைத் தழுவி கதையை அமைத்திருந்தாலும் தமிழ் நாட்டுப் பண்பு கெடாமல் கதையைக் கொண்டு போயிருப்பது பாராட்டுக் குரியது.

திரைக் கதைக்கு ரவீந்திரனும், கண்ணதாசனும் வசனம் எழுதி இருக்கின்றனர். கருத்துச் செறிவுள்ள வசனங்கள்; ஆனால் படத்தின் ஓட்டத்துக்கு தடையல்ல. பிரசாரம் உண்டு என்றாலும் கலைக் கண் கொண்டு பார்ப்பவர்களுக்கு அது தடையாகத் தெரிவதில்லை.

கலை மன்னன் !

நாடோடியாகவும், மன்னன் மார்த்தாண்டனாகவும் தோன்றுகிறார் எம். ஜி. ஆர். மலைக்கள்ளனுக்குப் பிறகு எம். ஜி. ஆரின் அருமையான நடிப்பை ‘நாடோடி மன்ன’னில் தான் காண்கிறோம். மகாராணி மனோகரி (எம். என். ராஜம்) நாடோடியைத் தன் கணவன் என்று எண்ணி தன்னைக் கைவிடாமல் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டும் போது, தான் மன்னன் இல்லை என்று சொல்லி தன்னுடைய கதையைச் சொல்லும்போது எம். ஜி. ஆர். சிறப்பாக நடித்திருக்கிறார். மன்னன் வேடத்தை விட நாடோடி வேடம் அவருக்கு மிகப் பொருத்தமாக இருக்கிறது.

நாடோடியின் காதலி மதனாவாக பானுமதி நடிக்கிறார். நாடோடிப் பெண் வேடம் அவருக்கு மிகவும் பிடித்த வேடமாயிற்றே! நடிப்பைப் பற்றிக் கேட்கவா வேண்டும்? சிறையில் நாடோடி பாடும் போது, மேல் அறையில் நின்றுகொண்டு அவர் அபிநயம் பிடிப்பது வெகு ஜோர். சந்திரபாபுவுடன் நடிக்கும் போது இருந்த துடுக்குத் தனம், தன் காதலன் வேறொரு பெண்ணைத் தூக்கிக் கொண்டுவருவதைப்பார்த்து சந்தேகிக்கும் கட்டத்தில் மறைந்து, சோகம் கலந்த துடிப்பான நடிப்பைப் பார்க்

கும்போது பானுமதி பானுமதித்தான் என்று சொல்லத் தோன்றுகிறது. படத்தின் முற்பகுதி கதை ஓட்டத்திற்கு பானுமதி நடிப்பு ஜீவநாடி. ராஜத்தின் நடிப்பில் நாளுக்கு நாள் மெருகு ஏறிக் கொண்டே போவதைக் காண்கிறோம், தோற்றக் கவர்ச்சியும் போதையூட்டும். ஆனால் அரச சபையில் அவர் அப்படிச் சிரித்திருக்க வேண்டாம்! வீரப்பா வழக்கம்போல் 'வில்லனாக' வருகிறார். நம்பியார் நடிப்பில் புதுமையில்லை. ஆனால் குறையில்லை. கன்னித்தீவின் வளர்ப்பு மகளாக நடிக்கும் சரோஜா தேவியின் நடிப்புடன் தோற்றமும் கவர்ச்சியாக இருக்கிறது.

சலியாத நகைச்சுவை விருந்தே அளிக்கிறார் சந்திரபாபு. குரங்குடன் பேசுவதும், கோழி முட்டையைத் தின்றுவிட்டு கோழிக் குஞ்சை வாயில் இருந்து எடுப்பதும் மறக்க முடியாத காட்சிகள். நினைத்து நினைத்து சிரிக்க வேண்டிய காட்சிகள் அவை. அத்துடன் சகுந்தலாவுடன் அவர் ஆடும் நடனம் வெகு பிரமாதம். முத்துலட்சுமி, தான் யாருடனும் 'ஜோடி' போட்டு நடிக்க முடியும் என்று நிரூபித்திருக்கிறார்.

பட உலகில் நீண்ட அனுபவம் காரணமாக தம் படத்தைத் தாமே டைரக்ட் செய்திருக்கிறார் எம். ஜி. ஆர். முதல் படத்திலே தாம் ஓர் சிறந்த டைரக்டர் என்பதைக் காட்டி விட்டார். ராணி மனோகரி நாடோடியை தன் கணவன் என்று தவறாக எண்ணி பூப்போட்டு வணங்கப்போகும் போது அதை ஏற்க விரும்பாத நாடோடி மன்னன் படத்துக்கு முன்னால் போய்நின்று பின்பு ராணி குனிந்து பூப்போடும்போது தான் விலகி நின்று பூவை படத்தின் காலடியில் போடும்படிச் செய்து தமிழ்நாட்டுப் பெண்ணின் பண்பு பரிமளிக்குமாறு செய்திருப்பது திறமையான டைரக்ஷனுக்கு ஓர் எடுத்துக் காட்டு.

கன்னித்தீவின், தலைவன் முன்னால் விருப்பம் இல்லாமல் ரெத்தினா ஆடும்போது அவள் தன் காதலனை நினைத்து, "என்னைக்காக்கும் இன்பம் எங்கே! இதயம் எங்கே?" என்று கேட்டு ஆடும்போது ஒவ்வொரு எங்கேக்கும் அவள் காதலன் மலைகளைத்தாண்டி வருவதைப் போல் எடுத்திருப்பது விறுவிறுப்புக்கு ஒரு உறைகல். பத்தொன்பதாயிரம் அடி நீளமுள்ள படத்தை அலுப்புத் தட்டாமல் விறுவிறுப்புடன் கொண்டு போயிருக்கிறார் எம். ஜி. ஆர். மதனாவின் தந்தையும் அவன் கூட்டமும் படத்துக்கு தேவையில்லை; அவர்கள் வரும் காட்சிகளில்லாவிடில் நீளத்தைக் குறைத்திருக்கலாம்.

சபாஷ், ராமு!

படத்துக்கே உயிர் G. K. ராமுவின் ஒளிப்பதிவுதான். வெளிப்புறக் காட்சிகளையும் சண்டைக் காட்சிகளையும் வெகு திறமையுடன் படம் எடுத்திருக்கிறார். இரட்டை வேடத்தின் ஒளிப்பதிவு முறை திறமையுடன் கையாளப்பட்டிருக்கிறது. ஒருவரே இரு உருவங்களில் வந்து கைகுலுக்குவதும், கன்னத்தில் தடவுவதும் ராமுவின் திறமைக்கோர் எடுத்துக்காட்டு. தண்ணீருக்குள் காதலிப்பதைப் போன்ற ஓர் காட்சி; வெகு சிரமப்பட்டு படம் பிடித்திருக்கிறார் ராமு. இக் காட்சி இதுவரை இந்திய திரைப் படம் கண்டிராத ஓர் புதுமை. கடல் அலைகளோடு போட்டி போட்டுக் கொண்டு எம். ஜி. ஆரும், நம்பியாரும் போடும் சண்டையையும், பல்லத்தில் வீரப்பாவும் எம். ஜி. ஆரும் செய்யும் சண்டையையும் பிரமாதமாக எடுத்திருக்கிறார் ராமு. ஆங்கிலப் படங்களோடு போட்டி போடுகிறது அவருடைய ஒளிப்பதிவுத் திறமை.

பாடல்களை, கல்யாணசுந்தரம், சுரதா, முத்துக் கூத்தன், ஆத்மநாபன் முதலியோர் இயற்றி இருக்கின்றனர். முத்துக்கூத்தன் இயற்றிய 'செந்தமிழே வணக்கம்' என்ற பாடல் நன்றாக இருந்தாலும் டைட்டில் போடும் போது பாடுவதால் பாட்டை ரஸிக்க முடியாமல் போகிறது. கல்யாண சுந்தரத்தின் "தூங்காதே தம்பி தூங்காதே!" என்ற பாடல் கருத்தாழம் நிறைந்தது; ரஸிகர்களிடம் செல்வாக்கையும் பெறும். சுரதா எழுதியுள்ள, "வருக வருக வேந்தே" பாடல் நன்றாக இருக்கிறது. சௌந்திரராஜனும், பானுமதியும் பாடியுள்ள "சும்மா கிடந்த நிலத்தைக் கொத்தி......" என்ற பாடல் கிராம மக்களின் இதய ஒலியாய் பிரதிபலிக்கிறது. எம். எஸ். சுப்பையா நாயுடுவின் இசையமைப்பு காதுக்கு அரியதோர் விருந்து. பின்னணி கீதம் காதுகளில் நின்று நிலவி ஒளிக்கின்றது.

கண்களுக்கு குளுமை தரும் கேவாகலர் படப்பிடிப்பும், சிறந்த கருத்துக்களைக் கொண்ட கதையமைப்பும் இப்படத்தை ஹிந்தியிலும் எடுத்து வட இந்தியா முழுவதும் வெளியிட எம். ஜி. ஆர் முயற்சிக்க வேண்டும். ஆங்கிலப் பிரதி ஒன்று உலக நாடுகளில் பவனி வரவேண்டும். தமிழர்களின் திறமையை வெளி உலகம் அறிய வேண்டுமல்லவா?—சோ. கு.

“இல்லறமே நல்லறம்”

இப்பொழுது எல்லாம் தமிழ் திரைப்படத் தயாரிப்பாளர்களிடையே ஓர் புதிய (1) திருப்பம் உருவாகி இருக்கிறது. பெண்கள் விரும்பக் கூடிய தலைப்பையே படத்துக்கு இடுவதும், அவர்கள் விரும்பும் கதை அமைப்பை அடிப்படையாக வைத்தே படம் எடுப்பதையுமே குறிப்பிடுகிறோம்.

நல்ல படங்களையே தயாரித்து வெளியிட்டுப் பெருமை கொண்ட நாராயணன் கம்பெனியாரின் “இல்லறமே நல்லறம்” ஓர் மனோதத்துவ உண்மையை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்ட படம்.

திரைக்கதையை உருவாக்கிய ஸ்ரீ கே. வி. சீனிவாஸன் தான் வசனமும் எழுதி இருக்கிறார். சடப்புடா வசனம் இல்லாமல் இனிமையாக, அதே சமயத்தில் கருத்துள்ள வசனங்களை பல இடங்களில் சேர்த்திருக்கிறார். இல்லறத்தின் இனிய அம்சங்களை ஆசிரியர் அதிகமாக விளக்கியிருக்கலாம்.

ஒன்றிரண்டு கட்டங்களில் தோன்றினாலும், உயர்ந்த நடிப்புக்காக நமது பாராட்டு தலைப் பெறுபவர் சுப்பையா தான். அப்பாவி அப்பாராக நடிக்கும் அவர் நடிப்பு அற்புதமாக இருக்கிறது. என்றும் இளமையுடைய அஞ்சலிதேவியின் நடிப்பில் சுவையும் அழகும் பரிமளிக்கின்றன. வேணுவுக்கு வந்த கடிதத்தை அவர் எடுத்துக் கூட்டிப் படிக்கும் அழகு முக நெளிவு, சிரிக்காத எவரையும் சிரிக்கவைத்து விடும். குடும்பப் பெண்களுக்கு உள்ள குண அமைப்பை நன்கு காட்டி இருக்கிறார் ராஜம்மா. நாகையாவின் நடிப்பைப் பற்றிக் கூறவேண்டியதில்லை. சரோஜாதேவியிடமும், சூரியகல விடமும் தமிழ் ‘படாத பாடு’ படுகிறது!

புல்லையாவின் கலை நுணுக்கம் நிறைந்த டைரக்ஷன் படத்திற்குச் சிறப்பு.

கமால் கோஷ் படப்பிடிப்பு, ஜீவாவின் ஒலிப்பதிவு சுகமாக இருக்கிறது.

பாடல்கள் நல்ல கருத்து நிறைந்தவை; மூர்த்தியின் இசையமைப்பில் இனிமை சொட்டுகிறது.

சிறிது நேரமே நீடித்தாலும் கமலாவின் பார்வதி நடனம் கண்ணுக்கு இனிய விருந்து.

—சோ. க.

லக்ஷிமி பிராண்டு

ஸ்டீல் டிரங்க் ஒர்க்ஸ்

திருச்சி-2.

Prop. T. P. வேலுப்பிள்ளை

குறிப்பு:—கேஷ் பாக்ஸ், ஆபீஸ் தபால் பாக்ஸ்,

கம்பைனேடிரே, ஜுவல் கேஸ்

இவைகள் உயர்ந்த முறை ஸ்டீலில் கிடைக்கும்.

144854.

Edited & Published by K. Perumal Udayar, 55, Edapalayam Street, Madras-3.
Printed by K. N. Thiruvengadam, at his Ananda Parvathi Press, 30, Edapalayam Street, Madras-3.